விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 322 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 20 ஞாயிற்றுக்கிழமை (06.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ரவி கருணாநாயக்கவுக்கு அமைச்சுப் பதவி?



(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, பாராளுமன்றத்திற்கு வருவதற்கு தயாராகி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளதாக வாராந்த பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்

19

## வவுனியாவில் கோர விபத்து மூவர் ஸ்தலத்தில் பலி

### 23 பேர் வைத்தியசாலையில்



(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகில் நேற்று இடம்பெற்ற பேருந்து விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அதிகாலை 12.15 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு

19

### எதிர்வரும் தேர்தலில்

## ரணிலுடன் கூட்டணிக்கு தயாராகிறது மொட்டு?

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கூட்டணி அமைக்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் இதுதொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

### தேர்தலை ஒத்திவைத்தால்

# 220 லட்சம் மக்களுடன் வீதிக்கு இறங்குவோம்

## அரசுக்கு சஜித் எச்சரிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது மக்களின் ஜனநாயக உரிமையை மீறும் செயலாகும். மக்கள் கோரிக்கை விடுப்பது தேர்தலே என்பதால் அதை நடத்த வேண்டும். இல்லையெனில் 220 இலட்சம் மக்களுடன் வீதியில் இறங்கி தேர்தலைச் சந்திப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை - இந்திய

## விமான, படகு சேவைகள் ஜனவரியில்

16ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி இன்று எகிப்து பயணம்

(கொழும்பு)

காலநிலை மாற்றம் தொடர்பானமாநாட்டில் பங்கேற்பதற்

19

## கிராம உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

இதுவரை பொலிஸ் நிலையத்தின் சிறிய முறைப்பாடுகள் பிரிவின் பொறுப்பதிகாரி தீர்த்து வைத்து வந்த சிறிய முறைப்பாடுகளை தீர்த்து வைக்கும் பொலிஸ் அதிகாரத்தை கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வழங்குவது சம்பந்தமாக அரசாங்கம் விசேட கவனத்தை செலுத்தியுள்ளது.

அந்தவகையில் 14 ஆயிரம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக கிராம உத்தியோகஸ்தர்கள் சமாதான அதிகாரிகளாக வலுவூட்டப்பட உள்ளனர்.

19

## கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு - மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் முதியவர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக

19

## எரிபொருள் தட்டுப்பாடு நாளை தீர்வு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் செயற்கை எரிபொருள் தட்டுப்பாடு, நாளை திங்கட்கிழமை முடிவுக்கு வரும் என இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மனிதனால் உருவாக்கப்பட்டது என

19

## போதுமான எரிவாயு கையிருப்பில்

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயுவை ஏற்றிய 2 கப்பல்கள் இன்று நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.


3750 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்றும் 3780 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை ஏற்றிய

19

### சீன - இலங்கை ஒப்பந்தம்

## பேச்சுவார்த்தை விரைவில்

### ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

இலங்கை மற்றும் சீனாவிற்கிடையிலான பொரு

19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 01 – 11 – 1932

இறப்பு 02 – 11 – 2022

## கதிரவேலு சிவயோகம்

( **மலாயன் கபேயின் ஸ்தாபகர்** காலஞ்சென்ற **மு.கு.கதிரவேலு** அவர்களின் அன்பு மனைவி )

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவயோகம் அவர்கள் கடந்த 02.11.2022 (புதன்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற குழந்தைவேல் - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபாபதி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துரையப்பா மற்றும் கமலாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிறீஸ்கந்தராஜா தயாநிதி, சாந்தநிதி, இன்பநிதி, காலஞ்சென்ற சிறிசந்திரகாசன் மற்றும் சகலகலாநிதி, காலஞ்சென்ற கிருபாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாதன், மகேந்திரன், காலஞ்சென்ற துரைராசா மற்றும் சகுந்தலா, பிறேம்குமார், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிமுதல் இல. 272/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 855 5602 - மகன்
077 982 5046 - மருமகன்
077 737 7666 - மருமகன்
+447900238823 - மருமகன்

(C-5220)

தகவல் :-
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


## நீர்க்கசிவுக்கான இரசாயனப் பொருட்கள்

மழைக் காலத்தில் உங்கள் கட்டடங்கள் கூரைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை எங்களிடம் இரசாயனப் பொருட்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்து கொள்ளலாம்.

FINEX

போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்

இரும்புக் கம்பிகளிலுள்ள துருப்பிடித்தலை அகற்றுவதற்கான இரசாயனப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.
உலகத் தரமிக்க இரசாயனப் பொருட்களை ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம் விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்த்தர்கள்

**North & East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177,
077 232 3000
www.northand east engineering.com

(13363)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 814 7389, 077 986 5457

(13362)


# மரண அறிவித்தல்



## கனகசபாபதி மகாலட்சுமி

**பிறப்பு : 1931.02.09 இறப்பு : 05.11.2022**

யாழ்ப்பாணம் அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி மகாலட்சுமி அவர்கள் நேற்று (05.11.2022) சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற சதாசிவம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபாபதி அவர்களின் அன்பு மனைவியும் பூரவாகினி காலஞ்சென்ற சதானந்தன் (கனடா), கௌரிமனோகரி (கனடா), நாகநந்தினி (கனடா), நாகநந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாலன், வரதராஜா (கனடா), காலஞ்சென்ற பிரதாபன் (கனடா), நளினி (யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் திவாகரன் கவினா (கனடா), கனிஸ்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா (மலேசியா), இராசமணி, சிவபாக்கியம் (மலேசியா), இராசஇலட்சுமி (அவுஸ்திரேலியா), குகராஜா, தர்மராஜா, தனலட்சுமி (மலேசியா) மற்றும் செல்வலட்சுமி (லண்டன்), இராஜசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (மலேசியா), பார்வதி (மலேசியா), மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(13358)

076 866 1856
076 687 2952

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கம்மை நோய் தொடர்பில் வீண் அச்சம் வேண்டாம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்



**(கொழும்பு) இலங்கையில் குரங்கம்மை நோயாளர் இனங் காணப்பட்டுள்ளமை தொடர்பில் மக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

இலங்கையில் முதலாவது குரங்கம்மை நோயாளர் இனங் காணப்பட்ட நிலையில், அது தொடர்பில் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"இலங்கையில் நோய்க் கட்டு ப்பாட்டு முறை முறையாக அமுல் படுத்தப்பட்டு வருகிறது. எனவே தான் நோய்க் குள்ளான நபரை விரைவாக அடையாளம் காண முடிந்தது. மேலும், குரங்கம்மை நோய் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நெருங்கிய தொடர்பு மூலம் மட்டுமே பரவும். அது பல்வேறு வழிகளில் ஏற்படலாம்.

இந்த நோய் சிக்குன்குனியா போன்றதாகும். இவ்வாறான வைரஸ் பாதிப்புகள் அவ்வப்போது ஏற்படும். எனினும், இந் நோய் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். தேவையான சுகாதார வழி காட்டுதல்களை பின்பற்றுமாறு சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன. சந்தேகத்திற்கிடமான நோயாளிகளை சுகாதாரத் திணைக்களம் உன்னிப்பாக கவனித்து வருகிறது.

நாட்டில் குரங்கம்மை நோய்க்கு உள்ளான நபருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதோடு , அவருடன் நெரு ங்கிய தொடர்பினை பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இது அச்சப்பட வேண் டிய நிலைமை அல்ல.

இந்நோயை இனங்காண்பதற்கு முன்னெடுக்க வேண்டிய பரிசோதனைகளுக்கான சகல வசதிகளும் மற்றும் சிகிச்சைகளுக்கான மருந்துகளும் நாட்டில் உள்ளன. எனவே பிரதேசங்களைத் தனிமைப்படுத்தல் , விமான நிலையத்தை மூடுதல் மற்றும் பொது இடங்களை மூடுதல் என்பன அவசிய மற்றவையாகும்.

கடந்த மே மாதம் இந்நோய் பரவல் உலகில் பரவ ஆரம்பித்தது. ஐரோப்பிய மற்றும் ஏனைய நாடுகளில் தீவிரமாகப் பரவலடைந்து தற்போது குறைவடைந்துள்ளது. தென்னாசிய நாடுகளில் இதுவரையில் 23 நோயாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மாத்திரமே உயிரிழுந்துள்ளார். உலகலாவிய ரீதியில் 7,434 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு ,அவர்களில் 29 பேர் உயிரிழுந்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி)


# சேதனப்பசளை உங்கள் தோட்டத்திற்கும்

அனைத்து விதமான பழங்கள், மரக்கறிகள், பூ மரங்கள் மற்றும் பெருந்தோட்ட பயிர்களுக்கு பொருந்தும்

- ✓ பரிந்துரைக்கப்பட்ட தரத்தின்படி தயாரிக்கப்பட்ட உயர்தர உரங்கள் விற்பனைக்கு உள்ளன.
- ✓ மண்ணின் நுண்ணுயிரிகளின் செறிவூட்டல் ஊட்டச்சத்து கலவையை மேம்படுத்துகிறது.

QUICK ADS

எந்த அளவிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

0768 420 360 | 0767 675 358

(C-1846)


## மரண அறிவித்தல்

பிறப்பு 04 - 01 - 1936



இறப்பு 05 - 11 - 2022

### திரு. துரைச்சாமி வாமதேவன்

(ஓய்வுபெற்ற பெருந்தோட்ட உத்தியோகத்தர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.துரைச்சாமி வாமதேவன் அவர்கள் (05.11.2022) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - அம்பிகை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜசிங்கம் - கனகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற பிரேமகுமாரியின் அன்புக் கணவரும் லிங்கேஷன்(நியூசிலாந்து), அகிலேஷன் (கனடா), கிர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், சகாதேவன், ஞானேஸ்வரி, பாலதேவன் மற்றும் ஞான தேவன், ஞானதேவி ஆகியோரின் சகோதரரும் சங்கீதா (நியூசிலாந்து), துஷ்யந்தி(கனடா), உமாசுதன் ஆகியோரின் மாமனாரும் கணஷியாம் (நியூசிலாந்து), நேத்திரன், ஆயுஷி(கனடா), நவனிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 07.11.2022 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 937 0208
077 585 3803

(C-5223)

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மண்ணில் 29 - 06 - 1947



விண்ணில் 03 - 11 - 2022

### தம்பையா பாலச்சந்திரன்

(Engineer ceylon shipping corporation, Royal Ceylon navy commanding officer, NIS Shivaj - India Engine room artificer, Mechanical Superintendant - Lanka Cement)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பாலச்சந்திரன் அவர்கள் (3.11.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் சடையர் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜெயமலரின் அன்புக் கணவரும் சுகன்யா, ஷீபாகாந்த், சுகந்தன், ஷீபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திஷன், கீர்த்தனா, குயிந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பரமேஸ்வரம், ஸ்ரீரங்கநாயகி, சத்தியபாமா, ஸ்ரீரஞ்சினிதேவி காலஞ்சென்ற வைகுந்தவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேந்திரன், தேவராஜா, சிவமலர், தியாகராஜா, புஸ்பமலர், நேமிநாதன், காலஞ்சென்ற நடராஜா, ரவீந்திரன், மாதினி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (6.11.2022) 9.00 - 1.00 மணியளவில் Jeyaratne funeral parlor kallubowilla வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(13367)

தகவல்: சக்தி சதீஸ்காந்த் (பருத்தித்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதிக்குள் செல்லும் முனைப்பில் இந்தியா; அதிரடி காட்டி செல்லுமா சிம்பாவே

## இன்று பலப்பரீட்சை



20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. சுப்பர் 12 சுற்றில் விளையாடி வரும் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி குரூப் 2 பிரிவில் உள்ளது. பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா, வங்காள தேசம், சிம்பாப்வே, நெதர்லாந்து ஆகிய அணிகளும் அந்த பிரிவில் இடம்பெற்றுள்ளன. இந்திய அணி மெல்போர்ன் மைதானத்தில் நடந்த தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தானை 4 விக்கெட் வித்தியாசத்திலும் சிட்னியில் நடைபெற்ற 2 ஆவது போட்டியில் நெதர்லாந்தை 56 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தோற்கடித்தது. பெர்த்தில் நடந்த 3 ஆவது ஆட்டத்தில் தென் ஆபிரிக்காவிடம் 5 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றது.

4 ஆவது போட்டியில் வங்காள தேசத்தை 5 ஓட்டங்களில் வென்றது. இந்திய அணி ஐந்தாவது மற்றும் கடைசி ஆட்டத்தில் சிம்பாவேயை இன்று எதிர் கொள்கிறது. மெல்போர்ன் மைதானத்தில் இந்திய நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு இந்த போட்டி தொடங்குகிறது. இந்திய அணி 6 புள்ளியுடன் முதல் இடத்தில் உள்ளது. சிம்பாவே அணியை வீழ்த்தி 8 புள்ளியுடன் அரை இறுதிக்கு நுழையும் ஆர்வத்தில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி இருக்கிறது.

அரை இறுதியில் நுழைய இந்திய அணி வெற்றி பெறுவது கட்டாயமாகும். வங்காள தேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் திக்கு முக்காடிதான் வெற்றி பெற்றது. அதாவது தோல்வியில் இருந்து தப்பி வெற்றி கிடைத்தது.

இதனால் சிம்பாவே அணிக்கு எதிராக மிகவும் கவனமுடன் விளையாட வேண்டும். சிம்பாவே அணி எல்லா வகையிலும் இந்தியாவுக்கு சவால் கொடுத்து விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

துடுப்பாட்டத்தில் விராட் கோலி மிகவும் நல்ல நிலையில் உள்ளார். 4 ஆட்டத்தில் 3 அரை சதத்துடன் 220 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதே போல சூர்யகுமார் யாதவ் தொடர்ந்து நிலையாகவும் அதிரடியாகவும் விளையாடி வருகிறார்.

லோகேஷ் ராகுல் நல்ல நிலையில் திரும்பி இருப்பது அணிக்கு சாதகமே. சிம்பாவே அணி ஏற்கனவே அரை இறுதி வாய்ப்பை இழந்து விட்டது. பாகிஸ்தானை அதிர்ச்சிகரமாக வீழ்த்தியது. தென் ஆபிரிக்காவுடன் மோதிய ஆட்டம் மழையால் பாதியில் இரத்து செய்யப்பட்டது. வங்காள தேசம், நெதர்லாந்து அணிகளிடம் தோற்று இருந்தது. சிம்பாவே அணி இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்து வெற்றியை பெறும் வேட்கையில் உள்ளது. (க)

# மஹேலவின் சாதனையை முறியடித்த கோலி



ஐ.சி.சி இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிகூடிய மொத்த ஓட்டங்களைக் குவித்தவர் என்ற சாதனையை விராட் கோலி நிலைநாட்டியுள்ளார்.

பங்களாதேஷிக்கு எதிராக அடிலெய்ட் ஓவல் விளையாட்டரங்கில் நடைபெற்ற இருபது-20 உலகக் கிண்ண குழு 2 சுப்பர் 12 சுற்று கிரிக்கெட் போட்டியில் 16 ஆவது ஓட்டத்தைப் பூர்த்தி செய்தபோது இந்த சாதனையை விராட் கோலி நிலைநாட்டினார்.

இதன் மூலம் இதற்கு முன்னர் இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் மஹேல ஜயவர்தனவுக்குச் சொந்தமாகவிருந்த 1016 ஓட்டங்கள் என்ற சாதனையை கோலி முறியடித்தார்.

மஹேல ஜயவர்த்தன 2007இலிருந்து 2014 வரை விளையாடிய 5 இருபது-20 உலகக் கிண்ண தொடரில் 31 இன்னிங்ஸ்களில் 1016 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆனால், விராட் கோலி 2012 இலிருந்து 2022 வரை 5 இருபது-20 உலகக்கிண்ண தொடரில் 23 இன்னிங்ஸ்களில் 1065 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இந்த வருட இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட்டில் 4 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய கோலி முறையே 82, 62 , 12, 64 ஓட்டங்களைப் பெற்று மொத்தமாக 220 ஓட்டங்களைக் குவித்து 220.00 என்ற சராசரியைக் கொண்டுள்ளார். (க)


# மணிவிழா வாழ்த்து

## திருமதி யசோதரா சிவகுமார் அவர்கள்

### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

20.01.1989 தொடக்கம் இன்றுவரை 33 வருடங்கள் ஆசிரிய சேவையில் இணைந்து மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வியறிவினைப் பெற்றுக் கொடுப்பதில் சிறப்பாக கடமையாற்றி இன்றைய தினம் அகவை அறுபதைப் பூர்த்தி செய்து சேவையில் இருந்து ஓய்வுபெறும் திருமதி யசோதரா சிவகுமார் அவர்களின் ஓய்வுக்காலம் இனிதே சிறப்புடன் அமைய வேண்டுமென இறைவனது திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஆசிரியர் தொழிலில் மனப்பூர்வமாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி மாணவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு உழைத்த தங்களின் தன்னலமற்ற சேவையானது தங்களது ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் சிறப்பாக அமைய வழிவகுக்கும்.

**திரு.மு.இராதாகிருஷ்ணன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**



திருமதி யசோதரா சிவகுமார்

பிறந்த திகதி :- 06.11.1962
பாடம் :- விஞ்ஞானம்
முதல் நியமனம் :- 20.01.1989

*சேவை விபரம்*

- யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் - 20.01.1989 - 19.01.1992
- யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை - 20.01.1992 - 31.12.1993
- யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் - 1.1.1994 - 31.12.1995
- கிளி/பாரதி வித்தியாலயம் -1.1.1996 - 1.10.1996
- வ.தெற்கு/வலயக் கல்வி அலுவலகம் - 2.10.1996 - 28.11.1996
- வ/விபுலானந்த கல்லூரி - 29.11.1996 - 19.01.2003
- யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - 20.01.2003 - 03.05.2005
- யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம் - 4.05.2005 - 17.03.2015
- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி - 18.03.2015 - 05.11.2022

### அதிபரின் மணிவிழா வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியின் புகழ் வானுயரப் பணிபுரியும் ஆசிரியர்களுள் ஒருவராக தன்னை 18.03.2015 அன்று இணைத்துக் கொண்ட திருமதி யசோதரா சிவகுமார் அவர்கள் இன்றுவரை பூரண சேவையை மாணவர்க்கும் நிர்வாகத்திற்கும் வழங்கியமை போற்றுதற்குரியதாகும்.

விஞ்ஞான பாடத்தை மாணவர் விரும்பும் வகையில் கற்பித்ததுடன் அவர் தம் ஒழுக்க நன்னெறி உயர்விற்கும் பெரும் பங்காற்றியுள்ளார். கல்லூரி அன்னையின் விருப்பிற்கும் அன்பிற்கும் உரிய இவரது பண்பும், அன்பும் ஒழுக்கவிழுமியமும் பாடத்துறை சார்ந்த ஆன்ற அறிவும் கடமைப்பற்றும் கண்ணியமும் இறைவனின் அரிய கொடையாகும்.

காலச்சக்கர சுழற்சியில் அகவை அறுபதை அடையும் இவ்வேளையில் சர்வநலனும் பெற்று இனிதே வாழ எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.ம.ஞானசம்பந்தன்**
**அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.**

### ஆளுமைமிக்க நாயகியை வாழ்த்துகின்றோம்

வேலணை மண்ணில் அவதரித்த மணிவிழாக்காக ஒளி கொடுக்கும் திருமதி யசோதரா சிவகுமார் ஆசிரியர் அகவை அறுபதை அடைந்து ஆளுமைமிக்க வாண்மையாளரை ஓய்வு நிலை கண்டு மணிவிழாக் கொண்டாடும் பெரும் மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

விஞ்ஞானபாடத்தில் விற்பன்னராய் திகழ்ந்து விஞ்ஞான பாடத்தை மாணவர் விரும்பும் வகையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு மாணவர்களை வெற்றியாளர்களாக ஆக்கிய பெருந்தகையுமாவார்.

அடக்கமும் அமைதியான சுபாவமும் உடைய சமூக விழுமியங்களுடன் இருந்து ஓய்வுபெறும் அவர்களை ஓய்வுக் காலம் சிறக்க எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(C-5222)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் ரணில் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருவதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



எதிர்க்கட்சி பலவீனமாக உள்ளதால், தற்போதைய அந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு செல்வதற்கும் அதனூடாக ஸ்திரமான ஆட்சியை நடத் துவதற்கும் ஜனாதிபதி ரணில் உத்தேசித்துள்ளதாக அறிய முடிகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய ஸ்தர்களுடன் கடந்த சில நாட்களாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றார்.

உடனடி ஜனாதிபதி தேர்தல் ஒன்று வருமாயின் ரணிலை வேட்பாளராக நிறுத்தி அவரை வெற்றி பெறச் செய்ய ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உள்ளூரத் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

இதேவேளை எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெ ரமுன கூட்டணி அமைக்க கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (நி)

## கண்டி-நுவரெலியா பகுதியில்

# வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளான கார்

## ஐவர் காயம்

(ஹற்றன்)

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டி - நுவரெலியா பிரதான வீதியில் லபுக்கலை வெஸ்டவோட் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. வாகன சாரதிக்கு வேகத்தை கட்டுப்படுத்த முடியாத தன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் சாரதி உட்பட 5 பேர் காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# புதிய நிதி அமைச்சராக அலி சப்ரி நியமனம்?

(கொழும்பு)

புதிய நிதி அமைச்சராக அலி சப்ரி நியமிக்கப்படவுள்ளார் என தெரிய வருகிறது. அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறியுள்ளதால் அதன் பொறுப்புகளை வைத்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை அலி சப்ரிக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது வெளிவிவகார அமைச்சராக அலி சப்ரி செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


# பொது அறிவிப்பு

Watawala Dairy Ltd இன் "பிரைட் ஆஃப் லோனாக்" புதிய பால் பிராண்டானது, செப்டம்பர் 15, 2022 அன்று Ross Dairies (Pvt) Ltdக்கு விற்கப்பட்டது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

"பிரைட் ஆஃப் லோனாக்" தயாரிப்புகளின் உரிமை, மேலாண்மை, விநியோகம் மற்றும் உற்பத்தி ஆகியவை தி காமிக்ஸ் குழும நிறுவனங்களின் துணை நிறுவனமான Ross Dairies இற்கு அதிகாரப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

Watawala Dairy Ltd, பல ஆண்டுகளாக பிராண்டில் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் அளித்து வரும் வாடிக்கையாளர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

WATAWALA (C-1847)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் திருமதி. துளசி யதீஸ்குமார் அவர்களின் பாசமிகு தங்கை



அமரர். திருமதி.

## றெசாந்தன் சாருஜா

அவர்கள் 03.11.2022 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(13356)

ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# இராசிபலன்

06.11.2022
ஐப்பசி 20, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி பிற்பகல் 5.25 மணிவரை

ரேவதி பின்னிரவு 1.21 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்தரம்

வளவன்



மேஷம்

வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



கடகம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.



துலாம்

வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், உடல் நலன் சீராகும், சுப செய்திகள் வந்து சேரலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், கௌரவமான நாள்.



மகரம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.



ரிஷபம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு; பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.



சிம்மம்

மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வேலைச் சுமை கூடும் நாள், உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாவீர்கள், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.



விருச்சிகம்

தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



கும்பம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.



மிதுனம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.



கன்னி

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், அருமையான திருப்தி தரும் வகையில் அமையும்.



தனுசு

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



மீனம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தூர தரிப்பிடத்தில் இருந்து தனியார் பேருந்து சேவைகள் ஆரம்பம்

## யாழ்.மாநகர முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மையப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் தனியார் பேருந்து சேவைகள் அனைத்தையும் இயக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இச் சேவைகள், தனியார் பேருந்து சேவையினது உள்ளூர் சேவை,வெளி மாவட்ட சேவைகள் மற்றும் கொழும்பிற்கான இரவுச் சேவைகள் என மூன்று வகையான பேருந்து சேவைகள் நாளை மறுதினம் முதல் வழங்கப்படவுள்ளன.

போக்குவரத்து பொலிஸாருக்கு உதவும் வகையில் மாநகர சபையால் திசை குறிகாட்டி பலகைகள் பொருத்தப்படுவதுடன் போக்குவரத்து பொலிஸாரால் இந் நடைமுறை கடுமையாகப் பின்பற்றப்படும்.

தனியார் போக்குவரத்து பிரிவினரின் உள்ளூர் சேவை பேருந்துகள், நெடுந்தூர பேருந்து தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு தற்போது இயங்கி வரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும் என்பதுடன் மீண்டும் வரும் போது பிரயாணிகளை நெடுந்தூர பேருந்து நிலை யத்தில் இறக்கிச் செல்லும்.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் வெளி மாவட்டங்களிற்கு செல்லும் நீண்டதூர பெரிய பயணிகள் பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதி ஊடாக சத்திர ச்சந்தி சமிக்ஞை விளக்கினை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ். வீதியூடாகச் சென்று பிரதான வீதியினை அடைந்து வெளி மாவட்டங்களிற்கான பயணத்தினை மேற்கொள்வதுடன் மீண்டும் வெளிமாவட்டங்களிலிருந்து வரும் பேருந்துகளும் இவ் வழிப் பாதையூடாகவே பயணத்தினை மேற்கொண்டு பேருந்து தரிப்பிடத்தினை வந்தடையும்.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து புறப்படும் வெளி மாவட்டங்களிற்கு செல்லும் நீண்ட தூர பெரிய பயணிகள் பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேம்படி வீதிக்கு செல்வது தடை செய்யப்படுகின்றது.

இதற்காகப் போக்குவரத்து பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்பு பெறப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார். (நி)



மோசமாக பாதிக்கப்பட்டிருந்த வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதியினை மேம்படுத்தும் நோக்கில் 5.4 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (படம்-கஜிந்தன்)

# 25 ஆவது நிறைவும் சான்றிதழ் வழங்கலும்

(குருநகர்)

குருநகர் சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் நடத்தும் 25 ஆவது ஆண்டு நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் ஓய்வு பெற்ற உப அதிபர் திருமதி.யூஜின் யூலியஸ் தலைமையில் இடம் பெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், சிறப்பு விருந்தினராக யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி அ.ஜொ.யாவிஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-106)

# தொழில் பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையானது 2023 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கான முழுநேர கற்கைநெறிகளை எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி அனைத்து பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், கணனி படவடிவமைப்பாளர், முச்சக்கர வண்டி திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர் போன்ற கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 30.11.2022 இற்கு யாழ். வீரசிங்கம் மண்டபம், இல.12, 4 ஆம் மாடியில் அல்லது எமது பிரதேச தொழில் பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 021 221 1793, 021 205 7047, 021 226 2550 மற்றும் 070 716 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்என இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிர்ஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

# வட்டு இந்துவின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

(அராலி)

யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில், இடம்பெறவுள்ளது.

இதன்போது பழைய மாணவர் சங்கத்தின் யாப்பு சீர்திருத்தம் இடம்பெறவுள்ள துடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது.எனவே கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் இந்த கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகம் அறிவித்துள்ளது. (நி-104)

# திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்ற துவிச்சக்கர வண்டித் திருட்டுச் சம்பவத்திற்கு பதில் கூற வேண்டியவர்கள் யார் என மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் சபையில் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற அமர்வின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொதுச் சந்தையில் தொடர்ச்சியாக துவிச்சக்கரவண்டிகள் திருடப்படுகின்றன.

நகரசபையின் சந்தை என்பதால் நகரசபையே இதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்ற கருத்து நிலவுகின்றது.

தற்போது சந்தை குத்தகையாளர்களால் துவிச்சக்கர வண்டிகளுக்கு நுழைவுக் கட்டணமே அறவிடப்படுகிறது. எதிர்காலத்தில் பற்றுச்சீட்டு வழங்கும் போது நுழைவுக் கட்டணத்தை பாதுகாப்பு கட்டணமாக மாற்றி அறவிட நகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இவ் விடயத்தில் நகரசபையின் சந்தைக் காப்பாளர் பொறுப்புக் கூற வேண்டும்.பொலிஸாருக்கு தகவல் வழங்கி சந்தையில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர் வலியுறுத்தினார். (நி-30)

# யாழில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம் இளைஞன் மீது வாள்வெட்டு

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர் கொண்ட குழு இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளது.

குறித்த இளைஞன் காவலராக கடமையில் ஈடுபட்டிருந்தவேளை இந்த வாள் வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பத்தமேனி - அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த சதீஷ்குமார் சிந்துஜன் என்ற இளைஞனே வாள் வெட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-104)

# முழு நிலா கலைவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட 'முழுநிலா கலைவிழா' நிகழ்வானது நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் கலாசார குழுத்தலைவர் க.ஜெசீதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகனும் சிறப்பு விருந்தினராக எல்.ஓ.எல்.சீ லைப் அசூரன்ஸ் லிமிட்டெட் வலய முகாமையாளர் ஏ.அன்ரன் ஜனேசனும் கலந்து கொள்வர். (நி)



அனைத்துலக தமிழர் மேம்பாட்டு நிதியத்தின் அனுசரணையுடன் அதிரடி குழுமம் இணைந்து முன்னெடுக்கும் "போதைக்கெதிரான பாதை" எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலான விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக சித்திரம் வரைதல் போட்டி நேற்று முன்தினம் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. (படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 369
Viber 076 636 3378



# குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கக் காத்திருக்கும் தூண்டில்கள்

**“இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து விட விரும்பும் சர்வதேசத்தை சமாளிப்பதா? வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதா? ஆட்சியைக் கைப்பற்றத் துடிக்கும் பெரமுனவைக் கட்டுப்படுத்துவதா? ஐ.தே.கவை பலம் பெறச் செய்வதா? என்ற குழப்பத்தில் ஆட்சிப்பீடம்...”**

— அபிமன்யு

அரசாங்கத்திற்கு எதிராகப் போராடியவர்களை களையெடுக்கும் செயற்பாடு அண்மைக் காலத்தில் மிகத் தீவிரமாக நடைபெற்றது.

இதுவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வீரியம் தெரிந்திராத சிங்கள மக்களுக்கு, ராஜ பக்ஷக்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதன் பின்னரே அதன் வீரியம் தெரிய வந்தது.

அந்தளவுக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தினூடாக போராட்டக்காரர்கள் தேடித்தேடி வேட்டையாடப்பட்டனர் என்பதை சிங்கள மக்கள் அதற்கு எதிராக கிளர்ந்ததன் பின்னரே தெரிய வந்தது. இவை அனைத்தும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதன் பின்னர் நடந்தது என்பதே வியப் புக்குரியது.

ஆம், நாட்டில் ஏற்பட்ட பாரிய குழப்பத்தின் பின்னர் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்றவர் ரணில் விக்கிரமசிங்க.

அவர் ஜனாதிபதியானதும் நாட்டின் பொருளாதார நிலையை மீட்பேன் என்று கூறியதுடன்



பயங்கரவாத தடைச் சட்டத்தை உடன் அமுல் படுத்தி ராஜபக்ஷக்களுக்கு எதிராக போராடியவர்களை கைது செய்ததான வரலாற்றை மறந்து விட முடியாது.

நாட்டில் புரையோடிக்கிடந்த பயங்கரவாதத்தை ஒழித்து விட்டோம் என உலகிற்கு மார் தட்டிய ஆட்சியாளர்கள் இது சிங்கள பௌத்த நாடு என சிறுபான்மை தமிழினத்தை அழித்தொழிக்கும் செயலுக்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பிரயோகித்திருந்தனர்.

ஆனால் இன்று வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாய் பயங்கரவாத தடைச் சட்டம் எனும் இரும்புத்திரை சிங்கள மக்களை நோக்கி பாயத் தலைப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் நீக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட உலக நாடுகள் பல கோரிக்கைகளை விடுத்திருந்த போதிலும் அது நடந்ததாய் இல்லை.

அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை மீட்கும் செயற்பாடுகளில் இறங்குவதைத் தவிர்த்து மக்களை படுகுழியில் தள்ளும் செயற்பாடுகளை அரங்கேற்றுவதில் ஆட் சியாளர்களுக்கு என்ன சுவையோ.

காலம் கடந்து பிறக்கும் ஞானமாக அவர்களுக்கு ஞானம் பிறந்தாலும் அது மக்கள் பசியை போக்குமா என்பது கேள்விக் குறியே.

நாட்டை மீட்டெடுப்போம் என்று நம்பிக்கையுடன் பொறுப்பேற்றவர்களே நாடு மிக மோசமான நிலையில் உள்ளது. இன்னும் படுமோசமான நிலைக்குச் செல்லும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே வேதனை.

அண்மையில் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூழ்கிக் கொண்டிருக்கும் ரைற்றானிக் கப்பல் போன்று இலங்கையும் மூழ்கிக் கொண்டிருக்கிறது எனக் கூறியிருக்கின்றார்.

ஒரு புறம் பொருளாதாரச் சுமை, மறுபுறம் ஸ்திரத்தன்மையற்ற அரசு, இரண்டுக்கும் நடுவில் இளைஞர்களுக்கிடையிலான போதைப் பாவனை அதிகரிப்பு என்பன அச்ச நிலையையே ஏற்படுத்துகின்றன.

கடந்த புதன்கிழமை அரசாங்கத்திற்கு எதிரான பாரிய மக்கள் போராட்டம் ஒன்று கொழும்பில் நடைபெற்றது. இப்போராட்டத்தை அடக்கி ஒடுக்க பாதுகாப்புத் தரப்பினர் மிகத் தீவிரமாக செயற்பட்டிருந்தனர்.

இருப்பினும் வெளி நாடுகளின் அழுத்தம் காரணமாக குறித்த போராட்டத்தை அரசாங்கத்தினால் எதுவும் செய்து விட முடியவில்லை.

இதற்குச் சான்றாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் இன் டுவிட்டர் பதிவை கூறிவிட முடியும்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்த அரசாங்கம் இடமளிக்க வேண்டும்.

அவர்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களுக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும் என தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் சர்வதேச மன்னிப்புச் சபையும் குறித்த மக்கள் போராட்டம் தொடர்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது.

மக்கள் அமைதி வழிப் போராட்டத்தை மேற்கொள்வதற்கு யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை என்றவாறு அறிக்கையிட்டிருந்தது.

அதாவது மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கம் எத்தனிக்கக் கூடாது என்ற பொருள் படவே சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையிட்டிருந்தது.

அரசுக்கு எதிரான போராட்டம் பாரிய நெருக்கடிக்கு மத்தியில் நடந்தேறிய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பாராளுமன்றின் மீது தனது அதிருப்தியை தெரிவித்திருந்தார்.

அதாவது தான் எதிர்பார்த்த மாற்றங்கள் எதுவும் பாராளுமன்றத்தின் மூலம் நடைபெறவில்லை என சபாநாயகருக்கு கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

பாராளுமன்றின் செயற்பாடுகளில் தனக்கு திருப்தி இல்லை என்றும் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார். இங்குதான் நாம் ஒன்றை கவனிக்க வேண்டும்.

பொதுஜன பெரமுன மீண்டும் ஆட்சியை கைப்பற்ற மகிந்தவை எழுச்சியடையச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

தொடர்ந்து தெற்கின் பல பாகங்களிலும் மக்கள் சந்திப்புக்களை நடத்தி வருகின்றது. குறிப்பிட்ட மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான பேச்சுக்களும் மறைமுகமாக எழ ஆரம்பித்து விட்டன.

இந்த நேரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு தனது சொந்தக் கட்சியான ஐ.தே. கவை பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நீண்ட காலத்துக்கு இவ்வாறு மாற்றுக் கட்சி ஆதரவுடன் ஆட்சியை தக்க வைக்க முடியாது என்ற உண்மையை ரணில் உணராதவர் அல்ல. ஆயினும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அவரால் ஐ.தே.கவை கட்டமைப்பது அவ்வளவு சுலபமான விடயம் அல்ல.

தவிர ஐ.தே.கவை பிரதிநிதித்துவப்படுத்தும் யாரும் பாராளுமன்றில் தற்போது இல்லை என்பது அவர்களுக்கு பெரும் இழப்பே.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்த்து விட வேண்டும் என்பதில் சர்வதேசம் உறுதியாக நிற்கிறது.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில் செயற்படுகின்றார்.

பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீண்டெழ 2023 மார்ச் மாதம் ஆகும் என்கிறது ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை அறிக்கை. அரசுக்கெதிரான மக்கள் போராட்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக முளைவிடத் தொடங்கி விட்டன.

இந்த இக்கட்டான நேரத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பியிருக்கிறது ஆட்சிப்பீடம்.

இந்த குழம்பிய இந்தக் குட் டையில் மீன்பிடித்து விட பல தரப்பினரும் தயாராக நிற்கின்றனர். பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடந்து விடப்போகிறது என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சிறாப்பர் கனகசபையைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஊடகப் பணியிலும் சமூகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்தி மக்கள் சேவை புரிந்த நவாலியைச் சேர்ந்த செல்வராஜா ரமேஷ் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

எங்க இன்னமும் சிறாப்பரைக் காணவில்லை. ஏதேனும் உடல் நலக் குறைவோ. மூப்பரின் விசாரணை ஆலடியில் நிலவிய அமைதியைக் கலைத்தது.

ஓ! இப்ப மழை காலம். அதோட டெங்குக் காய்ச்சலும் ஆட்களைத் துரத்துது. வயது போன நேரங்களில கவனமாக இருக்க வேணும். விதானையார் விசுவலிங்கம் அறிவுரை கூறினார்.

அந்நேரம் பார்த்து சிறாப்பர் கனகசபையும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

இந்தா சிறாப்பர் வந்திட்டார். நாங்கள் என்னவோ ஏதோவெண்டு பயந்து போனம். கங்காணி கார்த்திகேயன் கூறி முடிப்பதற்குள் குறுக்கிட்ட சிறாப்பர்; எனக்கொண்டும் இப்ப ஆகாது. 2023 ஜனவரியில சனி மாற்றம். அப்பதான் கொஞ்சம் அலைச்சலாக இருக்கப் போகுது. அதின்ர ஆரம்பம்தான் காணி வழக்கு. அது தான் மன்றுக்குப் போயிற்று வாறன்.

**சாத்திரியார்:** அதுசரி சிறாப்பர் காணி வழக்கு எப்படி இருக்குது.

**சிறாப்பர்:** பொதுவில காணி வழக்கெண்டால், ஆறேழு வருசம் எடுக்கும். காணி வழக்குக்கெண்டு தனியான ஒரு நீதிமன்றம் அமைத்து ஒரு வருட காலத்திற்குள்ள தீர்ப்பு வழங்கப்படுமெண்டால் இந்தக் கள்ளக் காணி பிடிக்கிறதும் கள்ளக் காணி விற்கிறதுமான சோலி முடிவுக்கு வந்து விடும்.

**சாத்திரியார்:** அதுசரி சிறாப்பர் உங்கட காணியை கள்ள உறுதி முடிச்சு விற்பதற்கு ஒரு லோயர்தானே உதவியாக இருந்திருக்கிறார்.

**சிறாப்பர்:** ஓ! இப்ப ஒருசில லோயர்மார் நொத்தாரிசு எண்ட பெயரைப் பயன்படுத்தி எல்லா வேலையும் செய்யினம். இதால அப்பாவி மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகினம். அதிலும் கள்ளக் காணி பிடிக்கிறவியளிட்ட அடிபாட்டுக் குறுப்புகளும் இருக்கிறதால, அப்பாவி மக்கள் நீதிமன்றத்திற்குப் போறதுக்கும் பயப்படுகினம்.

**மூப்பர்:** சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் நல்லூர்ப்பகுதியில இயங்கின ஒரு உணவுச்சாலை நீதிமன்றத்தால மூடப்பட்டு உரிய காணிச் சொந்தக்காரர்களிட்ட ஒப்படைக்கப்பட்டிருக்குதாம். என்னவா இருந்தாலும் இப்ப எங்கட வடபகுதியில ஏகப்பட்ட காணி வழக்குகள் நடக்குது. இவற்றை உடனடியாகத் தீர்த்து வைக்கிறதாக இருந்தா காணிப் பிணக்குகளைத் தீர்த்து வைக்கிறதுக்கு தனியான நீதி மன்ற அமைப்பை உருவாக்கிறதுதான் ஒரே வழி.

**வாத்தியார்:** அதுசரி இந்த முறையும் பெய்யிற கடும் மழையைப் பார்க்கும் போது நெற் பயிர்கள் தப்பிப் பிழைக்கும் போலத் தெரியல்ல.

**விதானையார்:** விவசாயம் எண்டால் இப்படித்தான் வாய்க்கும் தேய்க்கும். ஆனால் விவசாயிகள் பாதிக்கப் படாமல் இருக்க அவர்களைப் பாதுகாக்க வேணும். இதற்கு அரசாங்கம் உரிய இழப்பீடுகளை வழங்குவதற்குத் தயாராக இருந்தால்தான் விவசாயிகள் தொடர்ந்தும் விவசாய முயற்சியில ஈடுபடுவினம்.

**கங்காணி:** ஓ! போன வருடம் பெய்த கடும் மழையால நெல் விதைச்சவியள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கினம்.

எனினும் இழப்பீட்டுக்கான விண்ணப்பம் ஒருசிலருக்குத்தான் வழங்கப்பட்டது. இதால விவசாயிகள் பலரும் மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டியதாயிற்று.

இந்த முறையும் அப்படியான வேலையைச் செய்யாமல் பார்த்துக் கொள்வது கமநல சேவை நிலையங்களின்ர தலையாய கடமை.

**விதானையார்:** அதெண்டால் உண்மை தான். பயிர் அழிவடைந்த விவசாயிகள் பலர் இருக்க, இழப்பீட்டிற்கென ஒரு குறிப்பிட்ட அளவு விண்ணப்பப் படிவங்களை விவசாயக் காப்புறுதி அமைப்புகள் வழங்கினால் அதனை கமநல சேவை நிலையங்கள் பெற்றுக் கொள்ள மறுக்க வேணும்.

அப்படி ஒருமுறை செய்தால், திருத்தம் தன்பாட்டில ஏற்படும்.

**பண்டிதர்:** திருத்தங்கள் பலவற்றில ஏற்பட வேண்டி இருக்குது. அதிலும் குறிப்பாக மீற்றர் வட்டித் தொல்லை இன்னமும் எங்கட தேசத்தில ஒழிந்தபாடில்ல.

மீற்றர் வட்டித் தொல்லையால உயிர் மாய்த்தவர்கள் ஏராளம். இருந்தும் அந்தப் பாவச் செயல் நிகழ்ந்து கொண்டுதான் இருக்குது.

**சாத்திரியார்:** சில விடயங்களில திருத்தம் தானாக வரவேணும். இதுக்குத்தான் பாவ புண்ணியமென்ற அறக் கருத்துக்களை எங்கட வருங்காலச் செல்வங்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறது. ஆனால் இப்ப அறக் கருத்துக்களுக்கு இடமில்லை எண்டாயிற்று.

**சிறாப்பர்:** அது தான் அறச் சிந்தனை இல்லாததால மற்றவர்களின்ர பொருட்களைக் கபளீகரம் செய்யிறதிலேயே சிலர் கண்ணும் கருத்துமாக இருக்கினம்.

வழிப்பறி, வீடு புகுந்து கொள்ளையடித்தல், திருட்டுத்தனம் என்பனவெல்லாம் பாவ புண்ணியம் பற்றி அறியாததால ஏற்படுகிற அக்கிரமம்தான்.


இவ்வாறு சிறாப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## மீற்றர் வட்டியிலிருந்து எம் தேசம் விடியாதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரைற்றானிக் கப்பல் போல நாடு மூழ்கிறதாமே உண்மையா?






மக்கள் திலகம்-அறிஞர் அண்ணா இருவரைப் பற்றிக் கூற முடியுமா?

**இதழினி — புலோலி**

**அன்பு என்ற சொல்லை அடிமைத்தனமாய் உபயோகிப்பவர்கள் எவ்வாறானவர்கள் வியாசரே?**

இந்த உலகில் அன்பு என்ற சொல்லே மிகத் தூய்மையானது.

அதை மாசு படுத்துபவர்கள் இப்போதும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

நாம் நண்பர்கள் என்று அடித்துக்கூறும் பலர் காதலர்களானதே வரலாறு.

அவ்வாறான அன்பு பிரிவு வரும் போது வன்மத்தையே கொட்டவல்லது.

காதல்- நட்பு என்ற இடைவெளிக்குள் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத கண்ணாடியைப் பத்திரமாகப் பாாப்பது மிகக் கடினம்.

அன்பின் மிகுதி காதலாகி காதலின் மிகுதி பிரிவாகி பிரிவின் மிகுதி தூற்றலிலேயே முடியும்.

**பாமா — வதிரி**

**கொட்டும் மழையில் நனைவதற்குப் பிடிக்குமா வியாசரே?**

மழையில் நனைவதற்கு யாருக்குத்தான் பிடிக்காது. உண்மையில் மழைக்காலம் ஒரு மனிதனின் பழைய பசுமையான நினைவுகளை மீட்க வல்லது.

அந்த நினைவுகளில் மிதக்கும் சுகத்தை சொல்லிப் புரிய வைத்து விட முடியாது.

ஒவ்வொருவரும் தமது இளமைக் காலத்தின் பசுமையான நினைவுகளை மீட்கும் காலமாக இந்த மழைக்காலம் இருக்கிறது.

எங்கள் காலத்தில் மழை வந்துவிட்டால் அதில் நனைவதற்கு வயல் வெளிக்கு நண்பர் கூட்டத்துடன் ஓடிச் சென்று விடுவோம். அந்த மழையில் நனைந்து காய்ந்து வீடு வர அம்மா தரும் தேநீரின் ருசிக்கு ஈடே இல்லை.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ரைற்றானிக் கப்பல் போல நாடு மூழ்கிறதாமே உண்மையா?**

என்ன செய்வது குரங்கின் கையில் பூமாலை இருந்தால் அதை அது என்ன செய்யும்.

முதலில் நாம், பட்டினி வரும், பஞ்சம் ஏற்படும், உயிர்கள் மடியும் என்ற பேச்சுக்களை நிறுத்த வேண்டும்.

மீனை கொக்கு பிடித்ததும் அந்த மீன் தப்பிப் பதற்கு முயற்சிக்கும்.

சிறு குளம் தான். ஒருவேளை அந்த மீனின் முயற்சி பலித்து விட்டால் அது குளத்துக்குள்ளே விழும். அவ்வாறு வீழ்ந்தால் அது பிழைத்துக் கொள்ளும்.

ஈரறிவு கொண்ட மீனினமே இவ்வாறிருக்க ஆறறிவுடைய மனிதர் நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதை நினைத்தால் சிரிப் புத்தான் வருகிறது.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**மதுசன் — மீசாலை**

**மக்கள் திலகம்-அறிஞர் அண்ணா இருவரைப் பற்றிக் கூற முடியுமா?**

மரத்திலே பழுத்த கனி தங்கள் மடியில் விழாதா? என்று பலர் ஆவலாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நல்ல வேளையாக அது எனது மடியில் வந்து வீழ்ந்துவிட்டது. அந்த இதயக் கனி தான் எம்.ஜீ.ஆர் என்று ஒரு விழாவில் எம்.ஜி.ஆரைப் பற்றி அறிஞர் அண்ணா கூறியிருக்கின்றார்.

இன்னொரு மேடையில் கவிதை பற்றிக் கூறிய அறிஞர் அண்ணா அழகும் உள்ளத்து உணர்ச்சியும் சேர்ந்தது தான் கவிதை.

யோசித்துப் பார்த்தேன். அந்தக் கவிதை எம்.ஜி.ஆர் என்று அவரைப் புகழ்ந்திருப்பார்.

எம்.ஜீ.ஆருக்கும் அறிஞர் அண்ணா மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு.

ஆதலால் தான் அவரின் திரைப்படங்களில் அறிஞர் அண்ணாவைப் பற்றிய கருத்துக்களை அதிகம் கூறியிருப்பார்.

**சுதன் — குப்பிழான்**

**புலிகளை அழித்துவிட்டோம் என்கிறார்கள்.பிறகு ஏன் மாவீரர் நினைவிடங்களில் சிரமதானத்தைக் கூட செய்ய விடமாட்டார்களாம்?**

புலிகள் பயங்கரவாதிகள். அவர்களை நினைவு கூரவோ அவர்களைப் பின்பற்றவோ இங்கு யாருக்கும் அனுமதியில்லை என்பதே பேரினவாத அரசுகளின் முடிவு.

ஆனால் தனது பிள்ளையை இழந்த தாய் அவனைப் புதைத்த இடத்தில் வீழ்ந்து அழுவதற்குக் கூட உரிமையில்லாத நாடாக இருப்பதை நினைக்கும் போது வேதனை மேலோங்குகிறது.

என்ன செய்வது போரில் இறந்த சிங்கள இராணுவ வீரரை நினைவுகூர அவனது தாய்க்கு உரிமை உண்டு.

போரில் இறந்த புலி வீரனை நினைவுகூர இவனது தாய்க்கு உரிமை இல்லை.

**ரதீஷ் — மாதகல்**

**பழைய திரைப்படங்கள் போல புதிய திரைப்படங்கள் வருவதில்லையே ஏன் வியாசரே?**

பழைமை எப்போதும் பெருமையானது. ஆனால் புதுமை என்பது மாறிக் கொண்டே இருக்குமே தவிர புதுமை ஒரு போதும் பழைமை ஆகிவிடாது.

பழைய திரைப்படங்களில் கதை இருக்கும். கதாநாயகன் இருப்பான். அவன் உத்தமனாக இருப்பான். ஆதலால் அது சமூகத்திற்கு ஒரு நல்ல செய்தியை சொல்லியது. புதுமையில் கதை இல்லை. கதா நாயகன் தான் வில்லன். மனித குலத்தின் சிறுமைத்தனம் அத்தனையையும் அவன் தான் செய்வான். இது எம் சமூக மட்டத்தில் வன்மத்தை வளர்க்குமே தவிர ஒரு நாளும் நல்ல செய்தியைத் தந்து விடாது.

**சி.ரஜி — கொக்குவில்**

**எங்கே நிம்மதி நிம்மதி என்று தேடிப் பார்த்தேன். அது எங்கேயும் இல்லையே?**

தம்பி ரஜி நிம்மதியைத் தேடித்திரியத் தேவையில்லையடா. அது எமக்குள்ளே தான் இருக்கிறது. அதை கண்டுபிடித்து விட்டால் பிறகு பிரச்சினை இராது.

ஒரு கடைக்கு சீனி வாங்கச் செல்கிறோம். அங்கு சீனி இல்லை. அடுத்த கடைக்குச் செல்கிறோம். அங்கும் சீனி இல்லை. அப்போது எம் மனதில் சக்கரை நினைவுக்கு வருமல்லவா. சீனி இல்லையென்றால் தேநீர் குடிக்க முடியாதா என்ன? இதோ என்னிடம் சக்கரை இருக்கிறது என்று தேநீரைக் குடித்து விட மாட்டோமா.

இது போலத்தான் ஒரு பிரச்சினைக்கான தீர்வு இன்னொரு விடயத்தில் உதிக்கும்.

ஆதலால் நிம்மதி என்பது நம்மையும் நம் மனதையும் பொறுத்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: ஆயிரத்தில் ஒருவன்
இயற்றியவர்: வாலி
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன்



ஏன் என்ற கேள்வி
இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை
நான் என்ற எண்ணம்
கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை

ஏன் என்ற கேள்வி
இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை
நான் என்ற எண்ணம்
கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை

பகுத்தறிவு பிறந்ததெல்லாம்
கேள்விகள் கேட்டதனாலே
பகுத்தறிவு பிறந்ததெல்லாம்
கேள்விகள் கேட்டதனாலே

உரிமைகளை பெறுவதெல்லாம்
உணர்ச்சிகள் உள்ளதனாலே
உரிமைகளை பெறுவதெல்லாம்
உணர்ச்சிகள் உள்ளதனாலே

ஏன் என்ற கேள்வி
இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை
நான் என்ற எண்ணம்
கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை

ஓராயிரம் ஆண்டுகள் ஆகட்டுமே
நம் பொறுமையின் பொருள் மட்டும் விளங்கட்டுமே
ஓராயிரம் ஆண்டுகள் ஆகட்டுமே
நம் பொறுமையின் பொருள் மட்டும் விளங்கட்டுமே

வருங்காலத்திலே நம் பரம்பரைகள்
நாம் அடிமை இல்லை என்று முழங்கட்டுமே
ஏன் என்ற கேள்வி
இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை

நான் என்ற எண்ணம்
கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை
நீரோடைகள் கோடையில் காய்ந்திருக்கும்
மழைகாலத்தில் வெள்ளங்கள் பாய்ந்திருக்கும்

நீரோடைகள் கோடையில் காய்ந்திருக்கும்
மழைகாலத்தில் வெள்ளங்கள் பாய்ந்திருக்கும்
நம் தோள் வலியால் அந்த நாள் வரலாம்
அன்று ஏழை எளியவர்கள் நலம் பெறலாம்

முன்னேற்றம் என்பதெல்லாம்
உழைப்பவர் உழைப்பதனாலே
கடமைகளை புரிவதெல்லாம்
விடுதலை வேண்டுவதாலே

ஏன் என்ற கேள்வி
இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை
நான் என்ற எண்ணம்
கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை

ஏன் என்ற கேள்வி
இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை...

# போதைப் பொருளில் தள்ளாடும் ஈழத் தமிழ் இளம் சமூகம்

**ஈழத் தமிழ் அரசியலில் ஈழத்து காந்தியென வர்ணிக்கப்படும் தந்தை செல்வாவைப் போன்ற ஒரு தீர்க்க தரிசனம் மிகுந்த தலைவரை தமிழ்த் தேசியப் பரப்பில் மீண்டும் எம்மால் இன்று வரை உருவாக்க முடியவில்லை. அதேபோல் சைவத் தமிழ் மறுமலர்ச்சிக்காக புரட்சிகரமாக செயற்பட்ட ஆறுமுக நாவலரைப் போன்ற ஒரு சமய ஞானியை மீண்டும் எம்மால் இன்று வரை உருவாக்க முடியவில்லை.**

சகல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு தேசிய சிறுபான்மை இனத்தினுடைய முதுகெலும்பாக இருப்பவர்கள் அவ்வினத்தினுடைய இளம் சமூகத்தினரே. அவர்கள் தான் எதிர்காலத்தில் தம் உரிமைகளுக்காக சிங்கம் போல் கர்ஜிக்க வேண்டியவர்கள்.

அந்த இளம் சமூகத்தினரை வேரோடு அழித்தால்தான். அவ்வினத்தையே கூண்டோடு அழிக்க முடியுமென. எதிரியானவன் குறி வைத்து விட்டால், அவ்வினம் பல நூற்றாண்டுகள் கடந்தும் மீட்சி பெற முடியாத ஒரு இனமாகவே உலக வரலாற்றில் என்றும் தடம் பதித்து நிற்கும்.

அதுபோல்தான் ஈழத் தமிழினத்தின் இளம் சமூகமும் மாயமானின் வலையில் வீழ்ந்து போன சீதையைப்போல், எதிரியினுடைய போதையெனும் மாயவலையில் வீழ்ந்து இன்று போதைப் பொருட்களின் பாவனைக்கு வயது வேறுபாடு இன்றி அடிமையாகியிருக்கிறார்கள். மீண்டு வர முடியாதவர்களாக இருக்கிறார்கள் எனின் ஈழத்தின் வடக்கே நிலைமை எப்படி இருக்கின்றது என்பதை ஓரளவாவது புரிந்து கொள்ள முடியும்.

2000 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் பிறந்த ஈழத் தமிழ் இளம் சமூகத்தினரே கடும் போதைப்பொருள் பாவனையிலும் கலாசார பிறழ்வுகளிலும் கடுமையான சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுவதாக புள்ளி விபரங்களில் இனம் காணப்பட்டுள்ளது.

இதனால் ஈழத் தமிழினத்தினுடைய அரசியல், ஆன்மிகம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு அனைத்துமே அழிவை நோக்கி பயணிப்பதாகவே தம் இனத்தின் மீது பற்று கொண்ட தமிழினப் பற்றாளர்களால் எண்ணத் தோன்றுகின்றது.

ஒரு தனி மனிதனின் வாழ்வென்பது அகமும் புறமும் சேர்ந்த இரு படிநிலைகளைக் கொண்டதென, உலகுக்கு முதலில் கற்பித்ததே எம் மூத்தக் குடியான தமிழினம் தான் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்ட ஈழத் தமிழினம் அகத்தே ஞானத்தையும் புறத்தே ஒழுக்கத்தையும் சேர்ந்த வாழ்வியலின் முத்தான தத்துவங்களில் முற்றாகத் தோற்றுப்போன ஒரு இனமாக தன்னை எதிர்காலத்தில் உருவகப்படுத்தி விடுமோ என்பதே பெரும் ஐயமாக உள்ளது.

ஆனால் நாம் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சிவபூமியில் போதைப்பொருள் பாவனையில் நீந்தி, குளித்து, நனைந்து போன எண்ணற்ற மாணவர்களையும் இளைஞர்களையும் எந்தக் காரணமுமே இல்லாமல் எதிரிகள் எமக்கு வைத்த இலக்குகளுக்காக உருவாக்கிக் கொண்டு இருக்கின்றோம். எம்மினத்துக்குள் இருக்கும்



சில புல்லுருவிகளின் ஆசீர்வாதத்துடன் இது நடந்தேறுகின்றது.

இன்று தமிழனே தமிழனை அழிக்கும் இனவாத எதிரியின் நயவஞ்சக நாச வலைக்குள் விரல் விட்டு எண்ணி விடக் கூடிய தமிழ் அடிவருடிகள் சிக்குண்டு போனது ஈழத் தமிழர்களின் ஜனநாயகத்துக்கும் அகிம்சைக்கும் எதிர்காலத்தில் பெருத்த அச்சுறுத்தலாகவே இருக்கப் போகின்றது.

பணத்திற்காக தன் சொந்த மண்ணையே திருடி விற்பவர்கள் கோடிகள் வருவாயைத் தரும் போதைப்பொருட்களை மட்டும் என்ன விட்டு வைப்பார்களா...? அதையும் தன் இனத்துக்குள்ளே பெரும் விருட்சம் போல் கிளை விட்டு நிச்சயம் பரப்பித்தான் விடுவான் என்பதை எம்மால் சிறிதளவாவது ஊகிக்க முடியும்.

உரிமைகளை பெற்றுத் தரும் அரசியலையும் ஞானத்தை பெற்றுத் தரும் ஆன்மிகத்தையும் ஒரு புள்ளியில் வைத்துக் கொண்டு வந்து இணையும் ஒரு தேசிய இனம் அகத்தேயும் புறத்தேயும் விடுதலை உணர்வை எந்தத் தடைகளும் இன்றி அனுபவிக்க தயாராகி விடும் என்பதே உலகில் என்றுமே தவிர்க்க முடியாத தலைசிறந்த சத்தியங்களில் ஒன்றாகும்.

இன்று அந்தச் சத்தியத்திற்கே சோதனை வந்து விட்டது என்றால் தமிழினம் தன் இருப்பை தக்க வைத்து கொள்வதற்கும் போதைப்பொருள் ஒழிப்புக்கும் என்ன உபாயங்களை எதிர் காலத்தில் கையாளப் போகின்றது என்பதை ஈழத் தமிழ் அரசியல் தலைமைகளும் ஈழத் தமிழ் ஆன்மிக பீடங்களும் ஈழத்தின் புத்திஜீவிகளும் கல்விமான்களுமே மக்களுக்காக கூறி நிற்க வேண்டும்.

**சாம் - ரமேஸ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல்கள் பொதிந்து கிடக்கும் மர்மக் குகைகள்

சரித்திரம் என்பது எப்போதுமே பல மர்மங்களை உள்ளடக்கியதாகத்தான் இருந்து வந்திருக்கிறது. சில சரித்திர ஆய்வாளர்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் நம்புவதற்குக் கடினமானவை. அதுவும் செவிவழிச் செய்திகள் இவற்றுடன் கலந்து நம்மை அடையும் போது நம்பகத்தன்மை மேலும் கொஞ்சம் குறையும்.

அதேசமயம் பொய்கள் என்று ஒதுக்க முடியாத அளவுக்கு அவற்றில் பல்வேறு கோணங்கள் இருக்கும். அப்படிப்பட்ட சுவாரஸ்யமான அதிசயங்களையும் மர்மங்களையும் விநோதங்களையும் இந்தத் தொடர் விபரிக்கிறது.

குகைகள் என்றாலே அவற்றில் ஏதோ மர்மம் இருக்கும் என்ற எண்ணம் தோன்றுவது இயற்கை. பீகார் மாநிலத்தில் உள்ள ஸோன் பண்டார் குகைகளைச் சுற்றி நிலவும் கதைகள் மூச்சடைக்க வைக்கின்றன. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் உருவானவை இந்தக் குகைகள். பீகாரில் உள்ள ராஜ்கிர் என்ற பகுதியில் உள்ளன. வைபர் குன்றுகளின் அடிவாரத்தில் இவை உள்ளன.




சமண முனிவர் ஒருவரால் எழுப்பப்பட்ட குகைகள் இவை என்கிறது குப்த மொழியில் எழுதப்பட்ட ஒரு கல்வெட்டு. அதே சமயம் திருமாலின் ஒரு உருவமும் இங்கே இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வு ஒன்றில் இந்தக் குகைகள் புத்த மதம் தொடர்பானவை என்று கூறப்படுகிறது.

ஆனால் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களால் இந்தக் குகைகள் எழுப்பப்பட்டன என்பதைவிட பெரிய மர்மம் ஒன்றும் இது தொடர்பாக உள்ளது.

இந்தக் குகைகள் ஸோன் பண்டார் என்று அழைக்கப்படுகின்றன. ஹிந்தியில் ஸோன் என்றால் தங்கம். பண்டார் என்றால் கிடங்கு.

இந்தக் குகையில் எங்கோ ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது என்றும் அதன் வழியே சென்றால் பெரிய அளவில் புதைத்து வைக்கப்பட்டுள்ள தங்கம் கிடைக்கும் என்றும் நம்பப்படுகிறது.

இதற்கு ஏற்றாற்போல் சுவர்களில் பல ரகசியக் குறியீடுகள் காணப்படுகின்றன. இதை ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாக அர்த்தப்படுத்திக் கொண்டு பலரும் இந்தக்குகைக்குள் ஏதாவது இரகசிய வழி இருக்கிறதா என்பதை அறிய முயன்றிருக்கிறார்கள். இதுவரை பலனில்லை.

ஒரு முறை இந்தக் குகைகளின் சுவர்களை வெடிகுண்டு வைத்து தகர்க்கக் கூட பிரிட்டிஷ் அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறது. ஆனால் சுவர்கள் அசைந்து கொடுக்கவில்லை. பிறகு அதை விட பெரிய முயற்சியை அரசு எடுக்கவில்லை.

பீகாரின் முக்கியமான சுற்றுலாத்தலங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் இங்கு உள்ள சிற்பங்கள் அல்ல குகையைச் சுற்றியுள்ள மர்மம்தான்.

## மற்றொரு மர்மம்

"சந்திரனில் இறங்கிய சாகசத்துக்கு ஒப்பானதாக இருந்தது" - நிலவில் முதலில் கால் வைத்த நீல் ஆம்ஸ்ட்ராங் ஒரு குகைக்குச் சென்று திரும்பியதைத்தான் இப்படி வர்ணித்தார்.

> **குகைக்குள் நுழைந்த போது அவர்களுக்கு வியப்புகள் காத்திருந்தன. கற்களினால் ஆன சுரங்கப்பாதைகள். அவை மிகச் சரியான கோணங்களில் வெட்டப்பட்டிருந்தன. பாலிஷ் செய்ததுபோல அவை பளபளவென்று இருந்தன. கி.மு 1500 ஆண்டைச் சேர்ந்த ஓர் இடுகாட்டையும் அங்கே கண்டார்கள். அங்கே ஒருவரின் உடலும் காணப்பட்டது. அதைத் தொட்ட மாத்திரத்தில் அது பொலபொலவென உதிர்ந்தது.**

ஈக்வடார் நாட்டின் தலைநகர் குயிடோ. அங்கிருந்து எட்டு மணி நேரம் காரில் பயணம் செய்து சாண்டியாகோ நதிக்கரை வழியாக நீண்ட தூரம் சென்றால் அங்கு மூன்று குடிசைகளைக் காணலாம். அவற்றில் ஷீவார் என்ற பழங்குடியைச் சேர்ந்த 12 பேர் வாழ்கிறார்கள்.

இவர்களின் பணி அங்கிருக்கும் டாயோஸ் என்ற ஒரு குகையை காவல் காப்பது தான். எதிரிகளின் தலைகளை மின்னல் வேகத்தில் கொய்யும் ஆற்றல் படைத்தவர்கள்.

1972 இல் எழுத்தாளர் எரிக் வான் டானிகென் என்பவர் 'The Gold of the Gods' என்ற புதினத்தை எழுதி இருந்தார். அதில் இந்த குகையை வர்ணித்ததுடன் அங்கு ஓர் உலோக நூலகம் இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அதில் உலோகத் தகடுகளில் யாரும் அறிந்திராத ஒரு மொழியில் பல விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். இது புனைகதை என்று ஒரு சாராரும் நிஜமென்று மற்றவர்களும் கூறத் தொடங்கினார்கள்.

இதைத் தொடர்ந்து ஸ்கொட்லாந்து நாட்டுக் கண்டுபிடிப்பாளர் ஸ்டான் ஹால் என்பவரின் தலைமையில் 100 பேர் அடங்கிய ஒரு குழு இந்தக் குகையை ஆராயப் புறப்பட்டது. அதில் விஞ்ஞானிகள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், பிரிட்டன் மற்றும் ஈக்வடார் நாட்டு இராணுவத்தினர் ஆகியோர் இடம் பெற்றனர். கூடவே நீல் ஆம்ஸ்ட்ராங்கும் இடம்பெற்றார்.

மேற்படி குகைக்குள் நுழைந்த போது அவர்களுக்கு வியப்புகள் காத்திருந்தன. கற்களினால் ஆன சுரங்கப்பாதைகள். அவை மிகச் சரியான கோணங்களில் வெட்டப்பட்டிருந்தன.

பாலிஷ் செய்ததுபோல அவை பளபளவென்று இருந்தன. கி.மு 1500 ஆண்டைச் சேர்ந்த ஒரு இடுகாட்டையும் அங்கே கண்டார்கள். அங்கே ஒருவரின் உடலும் காணப்பட்டது. அதைத் தொட்ட மாத்திரத்தில் அது பொலபொல வென உதிர்ந்தது.

உலோக நூலகம் என்று எதுவும் அவர்களால் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால் ஏழு மைல் தூரம் உள்ளடங்கியது என்று கணக்கிடப்படும் இந்தக் குகையில் நான்கு மைல் தூரம் மட்டுமே அந்த குழுவினரால் கடக்கப்பட்டது.

மீதமிருக்கும் மூன்று மைல்களில் இனி என்னென்ன வியப்புகள் காத்திருக்கின்றனவோ!

(மர்மம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் வேண்டாம் கல்வியைத் தொடர்...

அன்பு மகளே! ஆசை மகளே
ஆத்திரங் கொள்ளாதே!
இன்பமாய் நீயும் வாழ்ந்திடவே நாம்
முயன்று வருகின்றோம்
நன்றிது தீதிது என்று நாம் ஆராய்ந்து
நன்மையாய் முடிவெடுப்போம்
இன்று நீ காணும் புதிய உறவிற்காய்
பெற்றோரைப் பிரிந்திடாதே

கன்னலெனப் பேசிடும் காதல் வலையினிலே
வீழ முன் எண்ணிப் பார்!
என்னவர்கள் என்று நீ எமையே நினைத்து நீ
ஏங்கியே வாழ்ந்து நின்றாய்!
தென்றலென வீசிடும் காதல் நினைவினால்
ஊழ்வினை சூழ்கின்றதோ!
சின்னவள் நீ சிங்காரித்து சித்தம் பறிகொடுத்து
நித்தமும் உருகுகின்றாய்

தன்னம்பிக்கையுடனே தலை நிமிர்ந்து நீ
மதம் மாறிச் செல்வாயோ?
வன்னெஞ்சங் கொண்டு நீ அவன் பின்னே சென்று
உன் வாழ்வினைச் சிதைத்திடாதே
என்றென்றும் சொந்தங்கள் உனக்காகவே
வாழ்கின்ற உரிமையை வெறுத்திடாதே!
உன் நெஞ்சம் பறிகொடுத்து உன் வாழ்வை
உறுதி செய்ய ஒரு கணம் சிந்திப்பாயா?

திட்டங்கள் நிதம் தீட்டி எதிர்ப்போரை நிந்தித்து
திசை மாறிச் சென்றிடாதே
சிட்டாகப் பறக்கும் நீ சிறைக்குள்ளே அகப்பட்டால்
சிறகுகள் இயங்கிடாதே!
இட்டம் போல் என்றும் நீ இல்லறம் செய்திட
கரங்கூப்பி அழைக்கின்றோம்
பட்டங்கள் பெற்று நீ பாரினில் சிறந்திட
பருவம் வரும் காத்திருப்பாய்

சிவானந்தராஜா,
பண்டத்தரிப்பு.



## புரியாத உலகு



அடுக்கடுக்கான துயர்
அனுதினமும் அருகிருக்க
மிடுக்காய் பேசிடுவார்
தடுக்கார் தீயவைகள்
கொடுக்கார் பிறருக்கு
வடுக்கள் பல சொல்வார்
நடுக்கம் தரு நஞ்சை
நாவினிலே நிறைத்திடுவார்
கடுக்கண்டவர்கள் கூட
கயமைகளே செய்கின்றனர்
உடுக்கடித்துப் பாடினாலும்
உலகோர் இன்னும் புரியவில்லை
படுத்த படுக்கையில் போனால்
எல்லாமே முடிவு என்பார்

மானந்தன், அல்வாய்.

## மழைக் கவிதை...

வழிதவறி என் யன்னலில்
வீழ்ந்து கிடந்த
மழைத்துளிகளை தொட்டு
எழுதிய இந்த வரிகளின்
முடிவில்
விரலோடு சிலிர்த்தது
மழைக்கவிதை..

தன்னைப் பிரிந்து
எங்கோ
சென்றுவிட்ட தன் மழலைகளைத்
தேடும் தாயென
மார்பில் அடித்து அலறிப்
பொழிகிறது என் பல்கனியில்..

எப்படி சொல்வேன்
தவறவிட்ட உன்னை விட
என் விரலுக்கு
ஈர்ப்புவிசை அதிகம்
விரலோடு ஒட்டி
மழைக் கவிதையாகி
முகநூலில்
கண்டவர்.. கடந்தவர்..
விழி பருகி கருத்திட்டவர்..
துளிகளைப் பெருக்கி
நதி செய்தவர்..
நதியை கடலில் சேர்த்தவரென
நீளும் பட்டியலை..

எதுவும் பேசாமல்
கடலின் முகவரியை
கையில் கொடுத்துவிட்டேன்..
அங்கு சென்று
முத்தமிட்டு அணைத்துக்கொள்ளட்டும்..

சங்கரி சிவகணேசன்.

## மௌனத்தின் தேடல்- 582



## விருந்தோம்பல்

கலாசார மாற்றத்திலும்
பகட்டுப் பரிமாற்றத்திலும்
அவர் அந்தஸ்தைக் காட்டும்
இன்றைய விருந்தோம்பல்

பிரகவி,
கொக்குவில்.

## கலாசாரப் பண்பாடு

வந்தாரை வாழ வைக்கும் தமிழர் பண்பாடு
வாழை இலையில் சம்மணம் கொட்டிச் சாப்பிட்டு
குடும்பமாய் குதூகலித்து கூடி உண்பதே
கோடி கோடி இன்பம் தரும் விருந்தோம்பல்
இல்லாள் இன்முகம் காட்டி அன்புமழை பொழிந்து
ஈகை செய்யும் அழகைப் பாராய்

ஆ. செல்வி,
பருத்தித்துறை.

## வாழை இலை உணவு

வாழ்க என வாழ வைக்கும் இலை
வாழை இலை வாழ இலையாம்
ஏழ் பிறப்பும் எளிமை இளமை
இயைந்து தரும் இயற்கை இலை
தரை அமர்ந்து குனிந்து உண்ண
தான் இயங்கி உடல் பலம் பெற
உண்க உணவை அளவோடு எனின்
உணவே மருந்தாம் உடலே சிறக்கும்

வைகதன்,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 583



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
"வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஈனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## அன்பின் கூடு

ஆயிரம் யன்னல் வீடுதனிலே
ஓராயிரம் சொந்தங்களை தன்னகத்தே கொண்டு
அன்போடு அமுது தனை பாசங் கலந்து கூடி உண்டு
ஆசைக் கதைகள் பேசிய பொற்காலங்கள் எல்லாம்
நவநாகரிக வருகையோடு
கானல்நீராய் கரைந்து போனது தான் ஏனோ?

ஆ.பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## உரிமை என்னே!

பந்தியில் உணவு ப்ரிமாறும் போது
பருப்புச் சட்டிக்குத் தனிப் பெருமை
பக்கத்து இலைக்கு பருப்பென அழைத்து
எனக்கும் வாங்கும் உரிமை என்னே!

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

## அமுதசுரபி

நெற்றி வியர்வை சொரிந்து
பசிக்கு உணவு அளிக்கும் அமுதசுரபியே
உப்புத் தண்ணீரில் கரைந்து சுவை தருவது போல்
அடுப்பம் கரையில் உன் வாழ்வை கரைத்து
அன்பும் பாசமும் கலந்து பந்தி பரிமாறும் அன்னையே

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## தன் பசி மறந்த அம்மா

அறுசுவையோடு சமைத்துப் போட்ட அம்மா
காத்திருந்து தன் பசி மறந்த அம்மா
அருகமர்ந்து இன்னும் ஒரு வாய் பிடி என்று
அம்புலி காட்டி பல பிடிகள் ஊட்டி வளமாக
வாழவைத்த அம்மா

செல்வா சுப்பிரமணியம்,
கல்வயல் சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பாகம்



சாண்டில்யன்

# கடல் புறா

## குறுக்கே புகுந்த குறுவாள்

காலத்தின் பதிவு 39

நடன நிகழ்ச்சியில் ஏற்படும் கலவரங்களுக்கும் கொலைகளுக்கும் அந்தச் சமயத்தில் நடந்த அத்தகைய எதிர்பாராத சம்பவமே வருடா வருடம் காரணமாயிருந்ததால், அதை அடுத்துப் பெரும் கலவரம் ஏற்படலாமென்று எண்ணியிருந்த பலவர்மன் இதயத்தில், அடுத்து ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பேராச்சரியத்தை விளைவித்தன.

குறுவாளினால் இளையபல்லவன் மாண்டு விட்டான் என்றே ஒரு விநாடி நினைத்த பலவர்மன், அடுத்த விநாடி அந்தக் குறுவாள் அமீரின் குறுவாள் வீச்சால் தடுக்கப்பட்டதைக் கண்டதும், "தூரத்திலிருக்கும் மனிதர் மீது குறி வைப்பதே கஷ்டம் அப்படியிருக்கக் குறுவாள்மீது இவன் எப்படிக் குறி வைத்தான்!" என்று தனக்குள் கேட்டுக் கொண்டு ஆச்சரியத்தில் திளைத்தான். அந்த இரண்டு குறுவாள்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக் காலடியில் விழுந்ததும் திரும்பிய இளையபல்லவன், அத்தனை ஆபத்திலும் நிதானமாகத் தன் பின்னால் நின்ற அந்த நால்வரை ஏறெடுத்துப் பார்த்ததைக் கவனித்ததும் ஆச்சரியத்தின் எல்லையை எட்டினான் பலவர்மன். அவனுக்குப் பின்னால் நின்ற பதக் சாதியாரின் தலைவர் இருவரும், சூளு இனக் கொள்ளைத் தலைவர் இருவருங்கூட அந்த வியப்பில் பங்கெடுத்துக் கொள்ளவே செய்தார்கள். இளைய பல்லவன் அங்கு தோன்றியதில் அவர்களுக்கு வியப்பேதுமில்லை. அக்ஷயமுனைக்குப் புதிதாக மரக்கலம் ஒன்று வந்திருந்ததும், அதன் தலைவனொருவன் கோட்டையிலிருந்து எய்யப்பட்ட விஷ அம்பினால் சாகாத விநோத மனிதனென்றும் அக்ஷயமுனைக் கோட்டைக்குள் பகலெல்லாம் பேச்சாயிருந்ததால், நடன நிகழ்ச்சியை முன்னிட்டுப் பகலிலேயே நகரத்துக்கு வந்துவிட்ட அந்த நால்வரும் இளையபல்லவனைப் பற்றிய வதந்திகளைக் கேட்டிருந்தார்கள்.

அவன் கோட்டைத் தலைவனை அவன் மாளிகையிலேயே சந்தித்து வெளியில் மீண்டும் சுதந்திரமாகச் சென்றதையும் இரவு நடன நிகழ்ச்சிக்கு வரவும் அவனுக்கு அனுமதி உண்டென்பதையும் மக்கள் பேசிக்கொண்டதிலிருந்து அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் அந்த விநோதங்களுக்குக் காரணத்தை மட்டும் அவர்களால் ஊகிக்க முடியவில்லை. எந்த அபாரமான சக்தியால் புதிதாக வந்தவன் கோட்டைத் தலைவனைத் தன் வலைக்குள் வளைத்து விட்டானென்பதைப் புரிந்துகொள்ள அவர்களால் இயலவில்லையாதலாலும் அது சம்பந்தமாக இல்லாத பொல்லாத வதந்திகள் ஊரில் பரவிக் கிடந்ததாலும் ஓரளவு கோபத்துடனும் வந்தவனை ஒழித்துக்கட்டும் எண்ணத்துடனுமே சொர்ணபூமியின் பூர்வக்குடிகளின் தலைவர்களான அந்த நால்வரும் நடன நிகழ்ச்சிக்கு வந்தார்கள்.

நடனத்துக்கு வந்தபோது அவனை ஒழித்துக் கட்டுவது பிரமாதமான காரியமாகவும் தெரியவில்லை அவர்களுக்கு. வருஷா வருஷம் இயற்கையாகவோ பலவர்மனால் காரியார்த்தமாகத் தூண்டப்பட்டோ நடனம் முடியுவடையும் தருணத்தில் ஏற்படும் குழப்பம் அந்த வருஷமும் அந்த வருஷமும் ஏற்படுமாகையால், அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்று வந்த அந்த நால்வரும், தாங்கள் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறான ஒரு மனிதனைப் பலவர்மன் காலடியில் கண்டார்கள். பயங்கரத் தோற்றமுள்ள ஒரு பெரும் கடற்படைத் தலைவனுக்குப் பதில், ஓர் அழகிய வாலிபன் அங்கு உட்கார்ந்திருந்ததைக் கண்டதும் அவன் வேறு யாரோ என்று நினைத்துத் தங்கள் பார்வையை ராட்சதன் போலிருந்த அமீரின் மீது திருப்பினார்கள். இசையிலோ நடனத்திலோ அதிக ஆர்வமில்லாத அரபுநாட்டு அமீர் அவர்கள் வந்த தோரணையைக் கவனித்ததுமே அவர்கள் நம்பத்தகாத வர்கள், தீயவர்கள் என்ற தீர்மானத்துக்கு வந்து எச்சரிக்கையடைந்தான். அமீரின் சுபாவத்தில் மற்ற எந்த அம்சங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் விஷமம் மட்டும் பூர்ணமாக இருந்ததால் அந்த நால்வர் தன்னையும் பார்த்து இளையபல்லவனையும் பார்த்ததையும் பிறகு ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு தன்னை நோக்கி தலை அசைத்தையும் கவனித்தான்.

(தொடரும்...)



# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு—பகுதி 1

போர்ச்சுக்கலில் 2007 ஆம் வருடம் புதிய உலக அதிசயங்களுக்கான இணைய வழித் தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தங்கள் நடந்த அதே சமயம் சுவிட்சர்லாந்தில் இலாபநோக்கு இல்லாத உலக இயற்கை அதிசயங்களை கண்டறிவதற்கான அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. புதிய 7 உலக அதிசயங்கள் என்ற அமைப்பை நடத்திய வர்கள்தான் இதையும் தோற்றுவித்தனர். 07.07.07 அன்று புதிய உலக அதிசயங்கள் அறிவிக்கப்பட்டன போல 11.11.11 அன்று புதிய இயற்கை அதிசயங்கள் ஏழு பட்டியல் அறிவிக்கப்பட்டது.

சுமார் 220 நாடுகளிலிருந்து 440 இடங்களுக்கான விருப்ப மனுக்கள் பெறப்பட்டு, 77 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதிலிருந்து 28 இடங்கள் இறுதிச்சுற்றுக்கு இடம் பெற்றன. நூறு மில்லியன் வாக்குகள் இணையம் வழியாக பதிவானதாகக் கூறுகிறார்கள். கடைசியாக அவற்றிலிருந்து ஏழு இடங்கள் அறிவிக்கப்பட்டன.

தென் அமெரிக்காவிலுள்ள அமேசான் காடுகள், தென் கொரியாவில் இருக்கும் தேஜூ தீவுகள், ஆர்ஜெண்டினாவிலுள்ள இகுவாசு அருவி, வியட்நாமில் உள்ள ஹலாங் வளைகுடா, பிலிப்பைஸில் ஓடும் ப்யூர்டா பிரின்சஸ் ஆறு, இந்தோனேசியாவிலுள்ள கொமோடா தீவுகள், தென் ஆபிரிக்காவில் அமைந்திருக்கும் டேபிள் மலைகள் ஆகியனதான் அந்த ஏழு அதிசயங்கள்.

**1. அமேசான் மழைக்காடுகள்**

தென் அமெரிக்காவின் மேற்கு கரையோரத்தில் ஆர்ஜெண்டினாவுக்கும் சிலிக்கும் இடைப்பட்டப் பகுதியில் நீண்டு பரவி இருக்கும் அண்டெஸ் மலைத்தொடரின் கிழக்கில் இருந்து அமேசான் மழைக்காடு தொடங்குகிறது. அமேசான் ஆற்றுப்படுக்கையும் மழைக்காடுகளும் 5.4 மில்லியன் சதுர கி.மீ (2.1 மில்லியன் சதுர மைல்)க்கும் மேலானதாகும். உலகின் மிகப் பெரிய மழைக்காடும் சுற்றுச் சூழல் முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். உலகின் மூன்றில் ஒரு பங்கு விலங்கினங்கள் இக்காடுகளில் தான் வசிக்கின்றன.

உலகில் வெளியிடப்படும் கரியமில வாயுவை பெருமளவில் உட்கொள்ளும் திறன் கொண்ட இந்த காடுகளுக்குள் சென்று விட்டு லேசில் மீண்டு வர முடியாது. இதற்கு காரணம், அங்கு வாழும் விலங்குகளும் இயற்கை அமைப்புகளும் தண்ணீரின் ஓட்டமும் இருட்டான சூழ்நிலையும் தான்.

அமேசான் காடுகளின் ஜீவாதாரமாய் விளங்கும் அமேசான் நதி உலகின் மிகப் பெரிய நதியாகும். இதன் நீளம் 4080 மைல் நீண்டு உள்ளது. அதன் வடிகால் 27,22,000 சதுர மைல்களை உள்ளடக்குகிறது. உலக நதி நீரின் பதினாறு சதவிகிதம் அமேசான் டெல்டா வழியாகப் பாய்கிறது.

அமேசான் என்ற வார்த்தைக்கு "திடகாத்திரமான உயரமான பெண்" என்று அர்த்தமாம். இந்த நதிக்கரையில் வளர்ந்துள்ள மரங்களின் வேர்ப்பகுதிகள் நதியின் ஊடாகப் பரவி நின்று, அந்த வழியாகச் செல்லும் படகுகளைக் கவிழ்க்கும் வல்லமை பெற்றவையாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல் 315
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நோயுற்றவர்களின் உரிமைகள் மீறப்பட்டால்

நோயாளர்களின் உரிமைகளை மதித்து நடப்பது மருத்துவக் குழுவின் கடமையாகும். அதே போல் நோயாளர்களுக்கும், அவர்களின் உறவினர்களுக்கும் சில முக்கியமான கடமைகள் இருக்கின்றன.

அவையாவன : சகநோயாளர்களை மதித்து நடத்தலும் அவர்களுக்கு இடையூறு செய்யாது இருத்தலும்.

மருத்துவமனையை அசுத்தம் செய்யாது தூய்மையாகப் பாதுகாத்தல்.

தமது நோய்நிலை பற்றிய போதிய விளக்கம் ஏற்படாத விடத்து மருத்துவக் குழுவுடன் நேரடியாக நீங்கள் பேசி, நிலைமையைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல், மூன்றாம் நபரினூடாக உங்கள் சுகம் பற்றி அறிய முயற்சிப்பது நல்லதல்ல.

மருத்துவத்துறையின் மேம்பாட்டிற்கு உங்கள் பங்களிப்புக்களை வழங்குதல்.

உங்கள் உடற் சுகத்திற் கவனமெடுத்து நீங்கள் நோயாளியாவதைத் தவிர்ப்பதன் மூலம் சுகாதாரத்துறைக்கு ஏற்படும் வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ளல்.

இன்னொரு நோயாளியின் சுகம்பற்றி மருத்துவக் குழுவிடம் வினவுவதைத் தவிர்த்தல்.

காரணம்: ஒவ்வொரு நோயாளியின் நோய்நிலை சம்பந்தமான தகவல்கள், அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட வேண்டும்.

இந்த நோயாளியின் நேரடியான அனுமதி இல்லாமல் அந்தத் தகவல்களை வெளிப்படுத்தும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை.

மருத்துவமனையின் சட்ட விதிகளை மதித்து நடத்தல்.

ஒவ்வொரு துறையிலும் எமக்கு இருக்கும் உரிமைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகும். அத்துடன் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு நாம் எம்மால் இயன்றவற்றைச் செய்துதான் ஆக வேண்டும்.



உரிமை என்ற பேச்சை எடுப்பதற்கே அச்சப்படும் ஒரு நிலை காணப்படுகிறது. எமது உரிமைகள் மீறப்படுவதாக நாம் உணரும் பொழுது அது சம்பந்தமாகப் பேசுவதற்கு அச்சப்படவோ வெட்கப்படவோ வேண்டியதில்லை.

உரிமைகளை மறுப்பவன் தான் உண்மையிலே மனித குலத்தின் முன் வெட்கப்பட வேண்டியவன்.

மருத்துவத்துறையிலே நோயாளர்களின் உரிமைகள் பற்றிப் பேசுவது மருத்துவக் குழுவுக்கும் நோயாளர்களுக்கும் இடையே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாக அமைந்து விடக் கூடாது.

உண்மையிலே அது ஒரு பரந்துபட்ட புரிந்துணர்வை ஏற்படுத்தி மருத்துவக் கவனிப்பு முறைகளை மேம்படுத்தும் ஓர் உந்து சக்தியாகவே அமைய வேண்டும்.

நோயாளர்களின் கவனிப்பு முறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. இவற்றைச் சட்ட வரையறைக்குள் அடக்கி விட முடியாது.

ஒவ்வொரு நோயாளியும் குணப்பட்டுச் செல்லும்பொழுது அவனும் அவனது குடும்பமும் மட்டுமல்ல மருத்துவக்குழுவும் மகிழ்ச்சி அடையும்.

ஒரு நோயாளி இறந்து விட்டால் அவனது குடும்பத்துடன் சேர்ந்து மருத்துவக்குழுவின் உள்மனமும் அழும். ஆனால் தொடர்ந்து அழுது கொண்டிருக்க முடியாது. காரணம் அடுத்த நோயாளியைப் பார்க்க வேண்டும் என்ற கடமை இருக்கும்.

எத்தனையோ மரணங்களையும் துயரங்களையும் பார்த்து விட்ட காரணத்தால் நோயாளிகள் தமது அறிவுரைகளைக் கடைப்பிடிக்காத பொழுது, அவர்களுக்கும் அதே கதி நேர்ந்து விடுமோ என்று மருத்துவக் குழுவின் மனம் பதைபதைக்கும்.

இவ்வாறான மன உணர்வுகளை எந்தச் சட்டக்கோவையினுள் உள்வாங்குவது? மருத்துவத்துறையில் மட்டுமல்ல எந்தத்துறைகளிலும் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குப் புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வும் கூட்டு முயற்சியும் அவசியமாகும்.

நோயாளர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்ற சிந்தனை எழுந்தால் அது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அந்த நிலையை மாற்ற ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பில் இங்கிலாந்து பாராளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

இலங்கையின் நிலைமை குறித்து அடுத்த வாரம் இங்கிலாந்து பாராளுமன்றம் விவாதிக்க உள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நிலைமைக்கான பிரித்தானியாவின் பதில் குறித்த பின்வரிசை வணிகக் குழுவின் விவாதம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன் கிழமை அன்று பொதுச்சபையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பின்வரிசை உறுப்பினர்களுக்கு அவர்கள் விருப்பமான விவாதங்களை முன்வைக்க, பின்வரிசை வணிகக் குழு வாய்ப்புகளை வழங்குகிறது.

முன்னதாக கடந்த ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்வின்போது பிரித்தானியாவின் தலைமையிலான இலங்கை தொடர்பான முக்கிய குழுவே, இலங்கைக்கு எதிரான யோசனையை முன்னகர்த்தி அதனை நிறைவேற்றியது. இதன்படி இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பான பொறுப்புக்கூறல் உள்நாட்டில் இருந்து சர்வதேசத்தின் கைகளுக்கு செல்கிறது.

எனினும் இதனை இலங்கை கடுமையாக ஆட்சேபித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொலிஸ் அனுமதிச்சான்றிதழ் பெற புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் இலங்கை காவல்துறை, பொலிஸ் அனுமதிச் சான்றிதழ்(Police Clearance Unit ) பிரிவுக்கு தனியான தொலைபேசி இலக்கங்களை வழங்கியுள்ளது.

பொலிஸ் அனுமதிச் சான்றிதழைக் கோரும் பொதுமக்களின் நலனுக்காக இரண்டு தனித்தனியான தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பொலிஸ் அனுமதிச் சான்றிதழ்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள பொதுமக்கள் 011 243 9185, 011 201 3500 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அச்சுவேலியில் குண்டு மீட்பு

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து குண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காணியின் உரிமையாளர் குறித்த காணியை சுத்தம் செய்யும் போது காணியினுள் குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது.இதனையடுத்து அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-104)


## வேலைவாய்ப்பு

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளைக்கு விற்பனை பிரதிநிதி வெற்றிடத்துக்கு சுயவிபரக்கோவை கோரப்படுகிறது. தங்களின் முழுவிபரம் அடங்கிய சுயவிபரக் கோவை எங்களுக்கு மின்னஞ்சல் info@ikendoo.com அல்லது 077 306 6114 whats app செய்யவும்.
Motor bike வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். Fuel Allowances வழங்கப்படும். சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்களின் வயதெல்லை 20-35. (C-1848)


## உள்ளூராட்சி மன்றங்களின்

# வட்டார எல்லை நிர்ணயத்திற்கான தேசிய எல்லை நிர்ணயக்குழு நியமனம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 262) இன்பிரகாரம் தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைப்பதற்கு, பிரதமர், பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார எல்லை நிர்ணயத்திற்காக ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தேசிய எல்லை நிர்ணயக்குழு கடந்த 1 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது.

அக்குழுவில் மஹிந்த தேசப்பிரிய தவிசாளராகவும் கலாநிதி. க.தவலிங்கம், ஜயலத் ரவி திசாநாயக்க, ஐ.ஏ. ஹமீட், திருமதி. டபிள்யூ.எம்.எம்.ஆர். அதிகாரி ஆகியோர் உறுப்பினர்களாகவும் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை முடித்து தங்களது சிபாரிசுகளுடன் கூடிய அறிக்கையை 2023 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். (நி)

# புஸல்லாவையில் விபத்து சாரதி உயிரிழப்பு



(ஹற்றன்)

புஸல்லாவை, எல்பொட தோட்டப் புகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை எரிபொருள் கொல்கலன் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையிலிருந்து கம்பளை -புஸல்லாவ எல்பொட தோட்டத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைக்கு தேவையான லீற்றர் டீசலை வழங்கிவிட்டு, கம்பளை நோக்கி திரும்பும் வழியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தானது சீர்றற காலநிலையால் வீதியின் வழுக்கல் தன்மையால் சாரதியின் கட்டுப்பாட்டைமீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதன்போது உயிரிழந்தவர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)


## பணியாளர் தேவை

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது.

1. சுத்திகரிப்பாளர் (பெண்)
2. புகைப்பட கலைஞர் (பெண்)

08.11.2022(செவ்வாய்) மற்றும் 09.11.2022(புதன்) ஆகிய தினங்களில் காலை 11.00 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கவும்.

இல: 307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கன்னாதிட்டி சந்தி அருகில்) 021 222 7266

(13359)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்:ரோகிணி 4
கி.பா:24 சூரி. செவ் 9 இல்
தகைமை/தொழில்: BSc (IT) ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: B/10251

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா:34 ¾ சூரி 11 செவ் 6 இல்
உயரம்:5' 6"
தகைமை/தொழில்: O/L நகைத்தொழில்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10267

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 2
கி.பா:50 சூரி 1 செவ் 12 இல்
உயரம்: 5' 7"
தகைமை/தொழில்:O/L வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10269

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ஆயில்யம் 4
கி.பா:44 ¼ சூரி 2 செவ் 12 இல்
உயரம்:5' 6"
தகைமை/தொழில்:BSc (UK)
எதிர்பார்ப்பு: படித்த பெண் வடமராட்சி விரும்பத்தக்கது
தொ.இ: B/10271

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா:36 சூரி 6 செவ் 3 இல்
உயரம்:5' 6"
தகைமை/தொழில்:BSc முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ:G/11007

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா:14 ¾ சூரி. செவ் 5 இல்
உயரம்:5' 6"
தகைமை/தொழில்: பட்டதாரி (அரசதொழில்)
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/11008

பிறப்பு:2001 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 4
கி.பா:26 ½ சூரி 8 செவ் 4 இல்
உயரம்:5' 2"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/11009

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா:45 ¼ சூரி 1 செவ் 3 இல்
உயரம்:5' 3"
தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/11011

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை-இந்தியா இடையிலான

# விமான, படகு சேவைகள்

# ஜனவரியில் ஆரம்பிக்கப்படும்

## இந்திய துணைத்தூதர் ராகேஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்தியாவிற்கான படகுச் சேவைகள், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய விமான போக்குவரத்து ஆகியன 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்துள்ளார்.

சமூக விஞ்ஞான ஆய்வு மையத்திற்கும் இந்திய தூதரகத்திற்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில்



அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் நில ஆக்கிரமிப்புகள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் மண்ணெண்ணெய் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுதலை இலங்கை - இந்திய போக்குவரத்து உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன் போதே இந்திய துணைத்தூதுவர் மேற்படி விடயம் தொடர்பாக உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## பொகவந்தலாவல பகுதியில்

# ஆட்டோ குடைசாய்ந்து விபத்து மூவர் மருத்துவமனையில்



(ஹற்றன்)

திருமண நிகழ்விற்கு சென்றவர்களை ஏற்றிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் பொகவந்தலாவ பலாங்கொட பிரதான வீதியில் கெம்பியன் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் முச்சக்கரவண்டி சாரதி உட்பட பெண் ஒருவரும் சிறுவன் ஒருவனும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பொகவந்தலாவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (நி)

# கடல் அட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

(அராலி)

மக்களுக்கு வளமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் அப்பளுக்கற்ற நோக்கோடு முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கடலட்டைப் பண்ணை செயற்பாடுகளை குறுகிய நோக்கங்களுக்காக யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அத்துடன் தன்னுடைய காலப்பகுதிக்குள்ளேயே, கடலட்டைப் பண்ணைகள் அனை



த்தையும் சட்ட ரீதியானவையாக மாற்றிக் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாச்சிக்குடா மற்றும் இரணைதீவு பகுதியில் கடலட்டைப் பண்ணைகளை அமைத்துள்ளவர்களில் சுமார் 80 பண்ணையாளர்களுக்கு, பண்ணைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை பூநகரிப் பிரதேச செயலகத்தினால் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-104)

## மன்னாரிலும்

# போதைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சுகாதாரத் துறையினரும் கல்வி துறையினரும் இணைந்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள போதைப் பொருள் பாவனையால் ஏற்படக் கூடிய தீமையான விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை பாடசாலை சமூகத்தில் தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெற்றோரின் சம்மதத்துடன் சிகிச்சைகளை நாடிவரும் ஆரோக்கியமான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-285)

## பெரிய புராண படன பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் சேக்கிழார் இயற்றிய 'பெரிய புராண படன பூர்த்தி விழா' நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுதுமலை சிவன் கோவில் மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும். (நி)

## சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்த கிளிநொச்சியில் விசேட குழு நியமனம்



(தருமபுரம்)

போதைப்பொருள்பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்துவதற்கு விசேட குழு ஒன்றினை, உருவாக்கி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-316)

# 3 மாதக் கைக்குழந்தையுடன் 10 தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார்)

இலங்கையில் இருந்து 3 மாத கைக்குழந்தையுடன் 10 தமிழர்கள் அகதியாக தனுஷ்கோடியை சென்றடைந்தனர்.

மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 குடும்பங்கள் தமிழகத்தை சென்றடைந்தனர்.

இலங்கையில் இருந்து மேலும் மூன்று மாத கைக்குழந்தையுடன் மூன்று குடும்பங்களைச்சேர்ந்த மேலும் 10 பேர் அகதிகளாக தனுஷ்கோடியை நேற்று சனிக்கிழமை காலை சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு, அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலை ஏற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக கடல்வழியாக



தமிழகத்திற்குள் அகதிகளாக சென்றடைந்தனர்.

தகவலறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு இராமேஸ்வரம் மரைன் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின் 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் இன்று வரை இலங்கையில் இருந்து 198 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-285)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பு எங்கு இருக்கிறதோ அங்கே கடவுள் இருக்கிறார்.

*- மகாத்மா காந்தி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களுக்கு உதவ வேண்டிய அரசாங்க நிறுவனங்கள் மறைந்திருக்கும் மர்மம் என்ன?

கால மாற்றம் பற்றிக் கவனமெடுக்கா விட்டால் மிகப்பெரும் பஞ்சத்தை நாடு அனுபவிக்க வேண்டிவரும் என்ற அபாய எச்சரிக்கையை துறைசார் நிபுணர்கள் விடுத்த வண்ணமுள்ளனர்.

எனினும் கால மாற்றம் தொடர்பில் யாரும் கவனமெடுப்பதாக இல்லை.

அந்த வகையில் இந்த ஆண்டு தாழ் அமுக்கம் காரணமாக ஏற்பட்ட மழைவீழ்ச்சியும் பருவகால மழையும் சேர்ந்து பெருவெள்ளம் என்றாயிற்று.

எனினும் இது குறித்த முன்கூட்டியே நம் விவசாயிகள் வழிப்படுத்தப்படவில்லை.

இங்குதான் ஒரு முக்கியமான விடயத்தை நம் சிந்தித்தாக வேண்டும்.

அதாவது அரச உத்தியோகத்திற்காக தவம் கிடப்பவர்கள் அரச வேலை கிடைத்ததும் தங்களை ஒரு புதுமனிதர்களாகக் கருதிக் கொள்கின்றனர்.

கூடவே மற்றவர்களை மதிக்கும் பண்பை அவர்கள் இழந்து விடுவதுடன் சமூக உறவையும் ஓரங்கட்டுகின்றனர்.

இந்த இயல்பு அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்குமானதல்ல என்பதை இங்கு நாம் கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் மேற்குறிப்பிட்ட கர்வத்தனமும் பொதுமக்களை உதாசீனம் செய்கின்ற குணமும் தங்களை விட்டால் ஆளில்லை என்ற மனநிலையும் அரச உத்தியோகத்தர்களின் கவசமாக இருக்கும்போது, அவர்கள் தங்கள் கடமைகளைப் புறந்தள்ளவே செய்வர். இதுவே இப்போது அரச அலுவலகங்களில் நடந்தாகிறது.

எனினும் மனிதநேயமும் பொதுமக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனநிலையும் அரச பணி என்பது இறைவனால் தமக்குத் தரப்பட்ட கொடை என்று கருதுகின்ற நல்ல உள்ளங்களும் இருப்பதன் காரணமாக அரச அமைப்புகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

உண்மையில் அரச அமைப்புகள் மக்களுக்குச் சேவை செய்வதற்கானதென்ற உண்மை உணரப்பட வேண்டும்.

இருந்தும் பொதுமக்களுக்கு நேரடியாக உதவ வேண்டிய அரச அமைப்புகள் மறைமுகமாக இருப்பதும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் எந்நாளும் வெளிக்களத்திற்குச் செல்வதற்காகப் பதிவிடுவதுமான செயற்பாடுகள் அவர்களையும் பொதுமக்களையும் அன்னியப்படுத்தி விடுகின்றன.

தவிர பொதுமக்களுக்கு சேவை வழங்கக் கூடிய நிறுவனங்களைத் தேடிப்பிடிப்பது முடியாத காரியம் என்றாகிறது.

குறித்த அரச சேவை வழங்கும் நிறுவனங்கள் தாம் வழங்குகின்ற சேவை விபரங்களைக் காட்சிப்படுத்தாத நிலைமைகள் மிகப் பெரும் துரதிர்ஷ்டமாகும்.

உண்மை. பொதுமுக்களுக்குச் சேவை வழங்குகின்ற அரச அமைப்புகள் பகிரங்கமான இடங்களில் இயங்க வேண்டும்.

அத்துடன் குறித்த அமைப்புக்குச் செல்வதற்கான வழிப்பயணப் பாதைகள் காட்சிப்படுத்தப்படுவதும் அவசியம்.

ஆனால் எங்கள் நாட்டில் அதிலும் குறிப்பாக வடபகுதியில் பொதுமக்கள் நேரடியாக அணுகக்கூடிய அரச அமைப்புகளும் அரச திணைக்களங்களின் உபபிரிவுகளும் கோடிகளுக்குள் இயங்குவதுதான் ஏன்? என்று புரியவில்லை.

## வவுனியா-மதவாச்சிக்கும் இடையே தடம்புரண்டது யாழ்தேவி

(வவுனியா)

யாழ். காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த யாழ்தேவி விரைவு தொடரூந்து தடம்புரண்டது.

இந்த விபத்து நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் வவுனியா மற்றும் மதவாச்சிக்கு இடையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த தொடரூந்தின் என்ஜின் மற்றும் இரண்டு பெட்டிகள் தடம்புரண்டதன் காரணமாக வடக்கிற்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

## ஊழல் எங்கு நடந்தாலும் 1905 இற்கு அறிவியுங்கள்

(கொழும்பு)

இலங்கையில் அரச ஊழியர்கள் செய்யும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் முறைப் பாடுகளை பதிவு செய்ய அவசர தொலைபேசி இலக்கம் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது. 1905 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இந்த முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

மாவட்ட செயலகங்கள், பிர தேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் சேவையாற்று வோரின் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை இந்த இலக்கத்திற்கு அனுப்பி வைக்க முடியும்.

மேலும், பதிவாளர் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தில் பணியாற்றுபவர்கள் செய்யும் இத்தகைய செயல்கள் குறித்த முறைப்பாடுகளையும் அதே எண்ணுக்கு அனுப்பலாம்.

மேலும், அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் பொதுப் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படும் இலஞ்சம் அல்லது ஊழல் நடவடிக்கைகளை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவிற்கு, 1954 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அனுப்பி வைக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## 500 மெற்றிக்தொன் அரிசிப்பொதி இலங்கைக்கு வழங்கியது சீனா

(கொழும்பு)

சீனா இலங்கைக்கு மேலும் 500 மெற்றிக் தொன் அரிசியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

குறித்த அரிசி நேற்று முன்தினம் கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் தேவைப்படும் மாணவர்களுக்கு இந்தத் தொகுதி அரிசி விநியோகிக்கப்படும் என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் பாடசாலைகளுக்கு 6 000 மெற்றிக் தொன் அரிசி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது. (நி)

## மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சு பதவி?

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் பல அமைச்சர்களை நியமிக்க உள்ளதாக உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையை 30 ஆக ஜனாதிபதியினால் அதிகரிக்க முடியும். அரசாங்கத்தை நடத்துவதற்கு எஞ்சியுள்ள அமைச்சர்களை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி, சி.பி.ரத்நாயக்க மற்றும் எஸ்.எம். சந்திரசேனவுக்கு அமைச்சர் பதவி கிடைக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரும் புதிய அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. (நி)

## போதைக்கு அடிமையான மகனை தூக்கத்தில் வைத்து கொன்ற தந்தை

### குருநாகலில் சம்பவம்

(குருநாகல்)

குருநாகல் ரிதிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடலுபொல பிரதேசத்தில் தந்தையொருவர் தனது மகனைக் கொலை செய்துள்ளதாக ரிதிகம பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை குறித்த கொலை இடம்பெற்றுள்ளது.

மகன் உறங்கிக் கொண்டிருந்தபோது, தந்தை தனது மகனை கோடரியால் தாக்கிக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும், பெற்றோரிடம் பணம் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்து வந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதையடுத்து குறித்த தந்தை பொலிஸில் சரணடைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன், உயிரிழந்தவரின் சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ரிதிகம பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## அரசியல் அறிவு மக்களிடம் குறைவு

### தேர்தல்கள் ஆணைக்குழு

அரசியல் அறிவற்ற வாக்காளர்கள் திலினி பிரியமாலியை கூடத் தெரிவு செய்வார்கள் என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் மிகவும் குறைந்தளவு அரசியல் அறிவுடையவர்களாக உள்ளனர்.

அரசியல் அறிவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் மத்தியில் மிகவும் குறைந்தளவு அரசியல் விழிப்புணர்வு காணப்படுவதால் மோசடி சந்தேகநபர் திலினி பிரியமாலி போன்றவர்கூட நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

நாட்டின் அரசியல் அறிவு அல்லது விழிப்புணர்வு என்பது மிகவும் மோசமானதாக காணப்படுகின்றது.

இதனை உயர்த்துவதற்கு அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது.

பொருத்தமான அரசமைப்பு மாற்றங்களை கொண்டுவருவதற்கான பொருத்தமான நபர்களை மக்கள் தெரிவு செய்வதற்கு மக்கள் அரசியல் விழிப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(4-7)

## முதலாம் ஆண்டு நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

வட அல்வை இளங்கோ சனசமூக நிலையத்தின் மூத்த உறுப்பினரும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஓய்வுநிலை நிறைவேற்றுப் பொறியியலாளருமான அமரர் வே.சிவயோகனின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை பிரதான மண்டபத்தில் இளங்கோ சனசமூக நிலைய பொருளாளர் மா.மெய்யமுகன்(Jp) தலைமையில் நடைபெறவுள்ளது. (4-7)

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்"

*- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ட்ரம்ப்?



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் 2024 ஆம் ஆண்டு தாம் மீண்டும் போட்டியிடுவது தொடர்பான மிகவும் வலுவான மறைமுக சமிக்ஞைகளை டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இடைத் தேர்தல்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், குடியரசுக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து இறுதிக் கட்டப் பிரசாரங்களில் டொனால்ட் ட்ரம்ப் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

டொனால்ட் ட்ரம்பை எதிர்த்து குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களாக மைக் பென்ஸ் மற்றும் புளோரிடா மாநில ஆளுநர் ரொனால்ட் டிசாண்ட்செஸ் ஆகியோரே போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் 72 மில்லியன் வாக்குகளையும் ஜோ பைடன் 81 மில்லியன் வாக்குகளையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அமெரிக்காவில் 100 இற்கும் மேற்பட்ட கார்கள் மோதி விபத்து



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கொலராடோ எனும் மாகாணத்தில் அமைந்துள்ள நெடுஞ்சாலையில் 100 இற்கும் மேற்பட்ட கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று பதிவாகி உள்ளது. அங்கு ஒரே நாள் இரவில் 2.5 அங்குல அளவிற்கு பனிப் பொழிவு இருந்ததால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதியில் கொட்டிக் கிடந்த பனிக்குவியலில் கார்ச் சக்கரங்கள் சிக்கி வழுக்கியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இதன் காரணமாக அந்த நெடுஞ்சாலையில் சுமார் 5 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் நெடுஞ்சாலையின் ஒரு பகுதி மூடப்பட்டு பனிக்குவியலை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது. (நி)

## கம்போடியாவுக்கு மோப்ப நாய்களை பரிசளித்த இந்தியா

(கம்போடியா)

கம்போடியாவின் ராயல் கம்போடியா ஆயுதப் படைகளுக்கு வெடிகுண்டுகளை கண்டு பிடிக்கும் 4 மோப்ப நாய்களை இந்திய இராணுவம் பரிசாக அளித்துள்ளது.

இந்த மோப்ப நாய்கள் டில்லியில் இருந்து கடந்த 24 ஆம் திகதி பயணிகள் விமானம் மூலம் கம்போடியா தலைநகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே கம்போடியாவுக்கு கடந்த 2016 இல் 15 மோப்ப நாய்களை இந்தியா பரிசாக அனுப்பியுள்ள நிலையில் இது இரண்டாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# ஏலியன் போல் தோற்றமளிக்கும் மனித சாத்தான்- வைரலாகும் புகைப்படம்

(பிரேசிலியா)

பிரேசிலில் ஏலியனைப் போன்று காட்சி அளிக்க விரும்பி மூக்கு, காது, விரல்களை நீக்கிய நபரின் புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

பிரேசில் நாட்டின் பிரையா கிராண்ட் பகுதியை சேர்ந்தவர் மிச்செல் ஃபாரோ டோ பிராடோ. இவரது உடலில் 85 சதவீதம் அளவுக்கு பச்சை குத்தியுள்ளார். மற்றும் ஓவியங்கள் வரையப்பட்டு உள்ளன. 60 இற்கும் கூடுதலான முறை தனது தோற்றம் மாறுவதற்கான சிகிச்சை முறைகளை மேற்கொண்டுள்ளார்.



இதன்படி, அவரது தலையில் கொம்புகள் பதிய வைக்கப்பட்டு உள்ளன.

மூக்கின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு உள்ளது. வயிற்றுப் பகுதியிலும் சில நீக்கங்களை செய்துள்ளார்.

ஏலியன் தோற்றத்தில் தனது கைகள் தெரிய வேண்டும் என்பதற்காக விரல்களில் ஒன்றையும் அவர் நீக்கியுள்ளார். இந்த விநோத உருவ அமைப்புடன் காணப்படக்கூடிய அவர் மனித சாத்தான் என்றும் அழைக்கப்படுகிறார். (நி)

# போருக்கு மத்தியிலும் ரஷ்யா செல்லும் ஜெய்சங்கர்



(மொஸ்கோ)

மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் 2 நாட்கள் பயணமாக ரஷ்யாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதன்படி, நாளை 7 மற்றும் நாளை மறுதினமும் அவர் ரஷ்யாவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

இதில் முக்கியமாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜெய் லவ்ரோவுடன் இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ரஷ்யா-உக்ரைன் போருக்கு மத்தியில் ஜெய்சங்கரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (நி)

## கனடாவில் அதிகரிக்கும் குரங்கம்மை

### 1,444 பேருக்கு தொற்று உறுதி

(ஒட்டாவா)

கனடாவில் குரங்கம்மை பாதிப்பு எண்ணிக்கை சற்று அதிகரித்து வருகிறது. கடந்த வாரத்தில் 9 பேருக்கு மட்டுமே புதிதாக பாதிப்புகள் ஏற்பட்டு இருந்தன. இந்த பாதிப்பு அதிகரிப்பும் தொடர்ந்து குறைவாகவே காணப்பட்டது. இந்நிலையில், திடீரென தொற்று எண்ணிக்கை உயர்ந்து உள்ளது.


இதன்படி, கனடாவில் மொத்தம் 1,444 பேருக்கு குரங்கம்மை பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்ந்துள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 42 ஆக உயர்ந்து உள்ளது. (நி)




# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 380 | 400 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 230 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 250 | 240 |
| தக்காளி | 450 | 350 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 150 | 200 |
| கோவா | 350 | 250 | 320 | 350 |
| கரட் | 350 | 400 | 400 | 440 |
| பூசணி | 160 | 200 | 150 | 200 |
| புடோல் | 250 | 250 | 180 | 280 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 600 | 600 |
| பெரிய வெங்காயம் | 260 | 260 | 280 | 300 |
| பாகற்காய் | 400 | 650 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 500 | 400 | 500 |
| லீக்ஸ் | 280 | 300 | 300 | 320 |
| பீற்றூட் | 250 | 200 | 280 | 280 |
| கறிமிளகாய் | 550 | 700 | 750 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | — | 330 |
| கீரை – 1 பிடி | 100 | 150 | 150 | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 550 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 500 | 400 | 350 | 480 |
| முள்ளங்கி | 120 | 160 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 150 |

# ஆபிரிக்காவின் மிகப்பெரிய பெண் யானை உயிரிழப்பு



(நைரோபி)

ஆபிரிக்காவின் மிகப் பெரிய பெண் யானை கென்யாவில் உயிரிழந்துள்ளது.

உலகில் சுமார் 50 ஆயிரம் யானைகள் உள்ளன. அவற்றில் 90 சத விகிதத்திற்கும் அதிகமாக ஆபிரிக்காவில் உள்ளன. யான்னகளை அழிவில் இருந்து காக்க பல்வேறு நாடுகள் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இதனிடையே, ஆபிரிக்காவின் மிகப் பெரிய பெண் யானை என்ற பெருமையை கென்யாவில் உள்ள டிடா என்ற யானை கொண்டிருந்தது.

60 முதல் 65 வயது கொண்ட இந்த யானை வயது முதிர்வு காரணமாக பெண் யானை டிடா உயிரிழந்து விட்டதாக கென்ய வனத்துறை தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

நோக்கி வேகமாக சென்ற அதிசொகுசு பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பாலத்தில் மோதுண்டு தடம்புரண்டுள்ளது.

விபத்தில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீட மாணவியான நாவலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ராமகிருஸ்ணன் சயாகரி (வயது-23), சாரதியான கோவிலடி, உடுப்பிட்டி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ்.சிவரூபன் (வயது-32), தம்பசிட்டி பருத்தித்துறையைச் சேர்ந்த இராமலிங்கம் நிதர்சன் (வயது-24) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை குறித்த பேருந்தில் பயணித்த 23 பேர் காயமடைந்த நிலையில் நால்வர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா மற்றும் ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7,60,104, 299,250)

## ஜனாதிபதி...

காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று எகிப்திற்கு பயணமாகவுள்ளார்.

எகிப்தின் Sharm El-Sheikh இல் இன்று ஆரம்பமாகவுள்ள இந்த மாநாடு எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.

இதேவேளை, 200க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். (4-7)

## கிராம உத்தி...

இதன்மூலம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும் பொலிஸ் அதிகாரத்தை நடைமுறைப்படுத்த அவர்கள் ஊக்குவிக்கப்பட உள்ளனர்.

இனிவரும் காலங்களில் ஒருவரது தேசிய அடையாள அட்டை காணாமல்போகும் சந்தர்ப்பத்தில் அது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை. கிராம உத்தியோகஸ்தரிடம் அது தொடர்பாக முறைப்பாட்டைச் செய்து, அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அத்துடன் கிராமங்களில் நடக்கும் சிறிய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொலிஸ் நிலையத்திற்கு செல்லாது கிராம உத்தியோகஸ்தரிடம் முறைப்பாடு செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும். (4-7)

## கிணற்றிலிருந்து...

பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த முதியவர் மனநலம் பாதிக்கப்பட்டவர். அவரை காணவில்லை என வீட்டில் உள்ளவர்கள் தேடிய வேளை அவரது சடலம் கிணற்றில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து மீட்கப்பட்ட குறித்த முதியவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7,104)

## ரவி கருணா...

ளது.

அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக ரவி கருணாநாயக்க இவ்வாறு பாராளுமன்றத்திற்கு பிரவேசிக்க உள்ளதாகவும் பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு பணத்தை வழங்கி பதவி விலக செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது எனவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-7)

## போதுமான...

கப்பலொன்றுமே நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக லிட்ரோ நிறுவன தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரைக்கும் போதுமான எரிவாயுவை முன்பதிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனவரி மாதம் நடுப்பகுதி வரை 28,000 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவிற்கான முன்பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (4-7)

## 220 லட்சம்...

ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் கிழக்குத் தொகுதிக்

கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் தலைவராக மகிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் ஊடாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கின்றது.

பல்வேறு உபாய வார்த்தைகளைப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலை மேலும் ஒத்திவைக்காமல் நடத்த வேண்டும் என்று மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம். இந்த ஆணைக்குழுவின் ஊடாக புதியமாகாண சபை மற்றும் பாராளுமன்றத் தேர்தலை நடத்த அரசு முயற்சிக்கின்றது.

தேர்தல் முறைமையை மாற்றியமைக்காமல் மக்கள் அபிப்பிராயத்திற்குச் செவிசாய்த்து, அவர்கள் வாக்களிக்கும் வகையில் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டியதே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை எனத் தெரிவித்தார். (4-7)

## எரிபொருள்...

வும், விநியோகஸ்தர்கள் தேவையான எரிபொருள் இருப்புகளுக்கான முற்பதிவுகளை, செய்யத்தவறியமையே பிரதான காரணம் எனவும் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் வெகுவாகக் குறைந்துள்ளது இதனையடுத்து அரசாங்கத்தின் எரிபொருள் விலைச் சூத்திரத்தின்படி மேலும் குறைக்கப்படும் என விநியோகஸ்தர்கள் எதிர்பார்த்திருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், எரிபொருள் விலைத் திருத்தம் செய்யப்படாததால், விநியோகஸ்தர், மீண்டும் தமது முற்பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக சாந்த சில்வா குறிப்பிட்டுள்ளார். (4-7)

## பேச்சு...

ளாதார தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்காக சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பிலான பேச்சு வார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனாவின் - ஷங்காய் நகரில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஐந்தாவது சீன சர்வதேச ஏற்றுமதி - இறக்குமதி கண்காட்சியின் தொடக்க விழாவில் மெய்நிகர் தொழிநுட்பத்தின் மூலம் காணொளியூடாக உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

சீனாவுடனான எமது முதலாவது தொடர்பு இறப்பர் - அரிசி ஒப்பந்தத்தின் ஊடாகவே ஆரம்பமானது. அன்று அது மிக முக்கியத்துவம்மிக்க ஒப்பந்தமாக அமைந்தது. இவ்வாண்டுடன் அந்த ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. இவ்வாறு ஆரம்பமான தொடர்புகள் வர்த்தகம், முதலீடு, கல்வி, சுற்றுலா, பாதுகாப்பு, சுகாதாரம் என பல துறைகளில் விரிவடைந்துள்ளது.

கடந்த ஆண்டு இரு அரசாங்கங்களுக்குமிடையிலான ஒட்டு மொத்த வர்த்தகப் பெறுமதி 3.4 பில்லியன் டொலர்களாகும். சீனாவானது இலங்கையின் பிரதான பொருளாதார மூலமாகும். இந்த தொடர்பினை மேலும் மேம்படுத்த வாய்ப்புள்ளது. சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் விரைவில் அவதானம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார். (4-7)


மஹஜன சம்பத
திகதி 2022/11/05
சீட்டிழுப்பு இலக்கம் 4930
Q 0 9 0 6 4 7
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 239
சிம்மம் 22 25 40 53 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1278
J 03 20 22 28 72

கொவிசெத
திகதி 2022.11.05
சீட்டிழுப்பு இலக்கம் 3172
F 11 13 64 67
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.11.05
சீட்டிழுப்பு இலக்கம் - 960
H 13 18 56 75
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1385
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 1 5 6 5 8 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1905 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.11.05 தினம் சனிக்கிழமை
A 05 16 45 52
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,407,380/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.05
சீட்டிழுப்பு இல : 4066
வர்ணம் : பச்சை
ரூ. 3,238,260/-
வெற்றி இலக்கங்கள்
38 49 70 71 A

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,499,752.40
திகதி 2022-11-05
வெற்றி வாரம் 3617
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 04 22 28 47 கன்னி
ரூ. 7,940,320/-

27
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 17 11 25 31 60
சீட்டிழுப்பு வாரம் 1081
வர்ணம் சிவப்பு
திகதி 2022.11.05 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 274,998,929.80
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 542 திகதி 2022-11-05 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 22 26 54 விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13,973,384/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1731
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.11.05
ரூ. 3,450,900/-
வெற்றி இலக்கங்கள்
13 33 42 57 O


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

ஈர அரிசி அரைத்து மா வறுக்க வேலையாள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். (வேலை பழகி வேலை செய்யலாம்) சம்பளம் 1500/= இற்கு மேல்

(C-5219)

**077 936 1356** நெல்லியடி

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

**IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH**

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(13314)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

**Passport அவசியமில்லை**

**55'000 விசாக்கள்** இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

**இன்னும் இரண்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் (C-5189)

**ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்**

இந்த வருடம் உயர்தரப் பரீட்சை எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

**V2 Travels 0768226240 0768226244**

## புலிகளின் தங்கத்தை மீட்க முயற்சித்த 8 பேர் கைது

(திருகோணமலை)

வாகரை வெருகல் பாலத்திற்கு அருகில் தொல்லியல் பெறுமதிமிக்க டயலொக் கல பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் புதைக்கப்பட்டதாக கூறப்படும் தங்கத்தை மீட்க முயற்சித்த 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிபடையினரால் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-7)

உ

ஓம் சக்திமயம்

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை

## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

### அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் தற்கால சூழல் என்ற கருப்பொருள் தொடர்பான ஓர் கலந்துரையாடல் நடாத்த வேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டுள்ளது. எனவே ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள், மஹோற்சவ உபயகாரர்கள், அலங்கார உற்சவ உபயகாரர்கள், ஏனைய விழா உபயகாரர்கள், சமூகப் பெரியார்கள், அம்பாளின் அடியார்கள், சமய, ஆன்மீக வல்லுனர்கள் போன்றோரை இன்று 06.11.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி ஆலய வளாகத்தில் ஒன்றிணைந்து தங்களின் ஆக்கபூர்வமானதும் மேலானதுமான கருத்துக்களை வழங்குமாறு அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

தெளிவே என் சிந்தனை

இங்ஙனம்

**இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**

முதன்மை பிரதமகுருவும் ஆதீன கர்த்தாவும்

மேற்படி தேவஸ்தானம்.

(C-5203)

## தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது சிறுவர் இல்லத்திற்கு

[ செஞ்சோலை ஆண்கள் சிறுவர் இல்லம் ]

- ஆண் பராமரிப்பாளர்கள்

**தகைமைகள்**

- 30 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
- ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் அரச உதிதியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்தல் வேண்டும்.
- மதுபான பாவனை மற்றும் புகைத்தல் பாவனை பழக்கம் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.
- தகுந்த ஊதியம் நேரில் பேசத் தீர்மானிக்கப்படும்.

(13355)

உடன் தொடர்பு கொள்ளவும்.

**071 535 4500, 076 178 0055, 074 080 8664**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 076 097 3127**

## வேலையாட்கள் தேவை

யாழ். மத்தியில் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் பணி புரிவதற்கு **சிசிடிவி டெக்னீசியன் (ஆண்) மற்றும் அலுவலக முகாமையாளர் (பெண்கள்)** தேவை.

(13357)

**076 989 9977**
**077 868 8517**

## இராஜ மருத்துவம்

கரப்பன், கிரந்தி, சோரியாசிஸ், மதுமேகம், வெள்ளை படுதல், கெர்ப்பவாயு, தீட்டு ஒழுங்கீனம், உடல்மெலிவு, பருமன், செங்கமாரி, பக்கவாதம், ஆண்மைக் குறைவு, சிறிய மார்பகம், மன அழுத்தம் சிகிச்சை பெறுவதற்கு.

**076 274 4488**

பேரறிஞர் **Dr. K. பாலசுப்பிரமணியம்**

**சிறப்பு ஆலோசகர்**

வல்லை வீதி, சங்கானை

(C-5221)

## அறிவித்தல்

இலங்கை மதுபானசாலைகளின் உரிமையாளர் சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி யாழ். நகரில் உள்ள **Jetwing Hotel** இல் காலை 9.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆகையால் யாழ்.பிரதேசத்தில் உள்ள அனைத்து மதுபான சாலை உரிமையாளர்களும் வருகை தந்து தங்களது கருத்துக்களை கலந்துரையாடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

**இலங்கை மதுபானசாலை உரிமையாளர்கள் சங்கம்**

(977)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கலைக்குரிசில்**

திருமதி

**தங்கேஸ்வரி தைரியநாதன்**

கடந்த 29.10.2022 சனிக்கிழமை அன்று யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்ற வடக்கு மாகாணப் பண்பாட்டு பெருவிழாவில் கலை, இலக்கிய, பண்பாட்டுத் துறைகளுக்கு பங்காற்றிய கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் **கலைக்குரிசில் விருது** பெற்றுக்கொண்டார்.

ஈழத்து திரைப்படத் துறையில் நடிகையாகப் பணியாற்றியமையினைப் பாராட்டி இவ் விருது வழங்கப்பட்டது. கலைக்குரிசில் விருது பெற்றுக் கொண்டமையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

(13351)

பேரப்பிள்ளைகள்,

பிள்ளைகள், மருமக்கள், குடும்ப உறவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.